www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.11 திருவள்ளுவர் ஆண்டு 2051 14.10.2020 - 13.11.2020 ISSN : 2195-6480

FREE Magazine

## உலகின் முதல் கொடுங்கோலன் யார்?





## சிங்களமே! தமிழர்களை மேலும் ஒடுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

DORTMUND மாநகரில் மளிகை உலகின்

# BIGG BOSS

# TKS BEST FOODS

6th ANNIVERSARY
ANNIVERSARY CELEBRATIONS

தள்ளுபடியிலும் தரம்...
உங்கள் பட்ஜெட்டுக்குள்ளேயே ஷாப்பிங்...
கூடவே பரிசுப் பொருட்களையும்
அள்ளிச் செல்லுங்கள்...

**வந்து பாருங்க!**

**வியந்து போவீங்க!**




Rheinische Str. 79 • 44137 • Dortmund
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de

SCAN ME

0049 231 950 468 83
tksbestfoods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



AKARAM

# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 - ஐப்பசி 2020 13 - கார்த்திகை 2020

சுவடி / ISSUE 8.11

**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu

**ISSN 2195-6480**

**www.akaram.eu**

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

## அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் பணிவான வணக்கம்.

உலகமே கொரோனாத் தொற்று நோயின் பிடியில் சிக்கி, மாபெரும் மனித குல அழிவைச் சந்தித்திருக்கிறது. சுமார் ஒரு வருடம் கடந்து விட்ட போதிலும், நோயின் பிடி அதிகரிக்கிறதே அல்லாமல், அதனை மாற்ற வல்ல மருந்து கண்டுப்பிடிக்க முடியாமல் உலகம் திண்டாடுகிறது.

ஆனால், ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை கொரோனா நோயின் கொடிய பிடியில் சிக்கித் தவிக்கும் அதே வேளையில், அந்த நோயின் கொடுமையை விட, அதிகக் கொடுமை நிறைந்த, சுய நலம் மிக்க அரசியல் தலைவர்களின் தமிழ் இனத் துரோக அரசியலுக்குள் சிக்கிச் சீரழிவதே மிகப் பெரிதாக உள்ளது. எமது 74 வருடகால சுதந்திர வரலாற்றில் தமிழ் இனம் சந்தித்த உயிர், உடமை, உரிமை இழப்புகள் முழுமையான இன அழிப்பை மிஞ்சி விடும் அளவுக்கு நடந்து விட்டன.

ஆயினும் அதனை வாய் விட்டு உலகறியப் பேசும் அளவுக்கு மனம் தைரியம் படைத்த ஒரு தலைவர் கூட நம்மிடையே தோன்ற முடியவில்லை என்கிற கையறு நிலைதான் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் காட்டி விட்டன.

எத்தனையோ பேர்கள் தலைமை தாங்க வந்தனர். வந்தவர் எல்லாம் தங்கள் தமிழர் தலைமேல் சவாரி செய்து, தமிழ் இனத்தைத் தலை தூக்காத படி செய்துவிட்டு, இன்னமும் தாங்களே தலைமை தாங்க வல்லவர்கள் என வைக்கோல் பட்டறை நாய்கள் போல நடந்து கொள்கின்றனர்.

சம்பந்தன், மாவை, சிறீதரன், சுமந்திரன் என எவருமே மக்களால் தெரிவான தலைவர்கள் என சொல்லிக் கொள்ளும் தகுதி அற்றவர்கள் என்பதை, அவர்களின் பண்டைய வரலாறுகள் சொல்லும். மக்களின் ஆதரவால் தெரிவான தலைவர்களைக் கொன்று விட்டு அல்லது கொலை செய்யவைத்து, அவர்களின் பதவியை நியமன உறுப்பினராக பின்வாசல் வழியால் வந்து நுழைந்தவர்கள்.

இந்த முறையும் சுமந்திரன் தெரிவான வரலாறு, சென்ற முறையைவிடப் பளிச்சிடும் வகையில் நடந்தேறி உள்ளது. வென்றவர் திருமதி ரவிராஜ், தோற்றவரானார் தோற்றவரான சுமந்திரன் வென்றவரான அதிசயம் கண்டு உலகம் வியக்க வில்லை. அதனால் வெறுமனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிசுகிசுக்கவே முடிகிறது. உண்மைகள் அந்த அளவுக்கு ஊமையாகி விட்டன.

உத்தமன் ரவிராஜ் கொலை பற்றிக் கவலையே படாத கட்சித் தேர்தல் வருவதை நினைத்து, நினைவுச் சிலையைப் படுகொலை நிகழ்ந்த இடத்தில் நிறுவாமல், அவரது தொகுதியில் பெரிய மனதுடன் நிறுவியது. 'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது போலத் தேர்தலில் கட்சியின் அம்மணத்தை மறைக்க, திருமதி ரவிராஜை வேட்பாளராக நிறுத்தி, வாக்கு வேட்டை நடத்தியது.

முடிவில் அவர் பெற்ற வெற்றியை அப்படியே திருடி, சுமந்திரனிடம் எப்படிப் போனது?. கில்லாடியான சித்தார்த்தன் உசாராகித் தனது வெற்றியை தக்க வைத்து விட்டார். வஞ்சிக்கப் பட்ட தமிழ் இனத்தின் வடிவமாக திரமுதி ரவிராஜ் தவிக்கிறார். இந்தத் துயரத்தில் உள்நாட்டு, வெளிநாட்டுத் தலையீடு இல்லை என்றால் நம்பவும் ஒரு ஆள் இல்லையே!.

இந்தத் தேர்தலில் தமக்கே வெற்றி என மகிந்தர் கூறியதில் என்ன தவறு? கழுதை ஒன்று தேய்ந்து கட்டெறும்பாக முடியுமா என்றால்? முடியும் எனக் காட்ட அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சாட்சி. அதன் இப்போதைய தலைவர் தேர்தலில் வென்றாரா, தோற்றாரா? என ஒரு பட்டிமன்றமே நடத்தி விடலாம். அப்படியான பைத்தியக்கார எண்ணம் எம்மிடம் வராது.

அகரம் கவலை அடைய பல வேறு காரணங்கள் உண்டு. வெற்றி பெற்ற விக்கினேஸ்வரன் செய்யும் பக்தி அரசியலால் சிங்கள இனவெறி புத்த மத வெறிகளின் வெம்மையைத் தாங்க முடியுமா?

சிவனே எனச் சும்மா இருக்க வேண்டியவர், மண்டையன் குழுவுடன் இணைந்து, தமிழ் தேசிய அரசியலின் பலத்தை உடைத்து, அவருக்கும் தமிழ் மக்களுக்கும் நல்லதைச் செய்யலாம் என எப்படி நினைத்தார்?

அநியாயமாக இவர் அரசியலுக்குள் இழுத்து வரப்பட்டவர். அதனால் அரசியலில் தமிழரின் தேசிய அரசியலில் யாருடன் கூட்டு வைப்பது என்கிறப் புரிதலை மறந்து மாணவர்களையும், மக்களையும் மண்டையில் போட்டுப் புலிகளுக்கு எதிராகப் போரிட்டதோடு இந்திய, இலங்கை அரசுகளின் அடியாளாகச் செயற்பட்ட அமைப்புடன், அதன் தலைவருடன் சேர்ந்து அவர் அரசியல் செய்வதை விட, சம்பந்தன், சுமந்திரனின் அரசியலை செய்வதே நல்லது என நினைக்க வைக்கிறது அவரது நிலைப்பாடு.

'எழுக தமிழ்' நிகழ்வில் இணைந்து, சுரேஸ் பிரேமச் சந்திரன் தமிழ் தேசிய அரசியலை முன்னெடுத்தார் என்பதற்காக, கஜேந்திர குமாரின் வழியில் இணைய விரும்பவில்லை என்பது அவர் தலைமை தாங்கும் தமிழ் மக்களுக்கு எந்த அளவுக்கு அவரால் விசுவாசமாக அரசியல் செய்ய முடியும் என்கிற கேள்வி எமக்குள் எழுகிறது.

சிங்களத் தலைவர்கள் யாரும் இப்படியான தர்ம சிந்தனைகளைப் பார்ப்பதில்லை. அதனால்தான் அவர்களால் எம்மை வேரோடும், வேரடி மண்ணோடும் அழிக்க முடிகிறது.

எம் இனம் அழிந்து கொண்டிருப்பதை ஏனோ இந்த ஞானவானுக்குத் தெரியாமல் போய் கஜேந்திர குமார் அணியுடன் கூட்டு வைக்க மறுத்தார். இப்பதான் தெரிகிறது தந்தை செல்வா தமிழ் மக்களைக் காப்பாற்றக் கடவுள்தான் வரவேண்டும் என்றதன் அர்த்தம்.

கடவுளைப்போல் தமிழீழ விடுதலைப் புலிகள் வந்தனர். அந்தக் கடவுளை அழிக்கப் போராடியவர்களுடன் இணைந்து, தமிழ் மக்களைக் காப்பாற்ற முன்வந்திருக்கும் இவர்களின் அரசியலால் இனி எந்தக் கடவுளாலும் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் வாய்ப்பை தமிழினம் இழந்து நிற்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் சொல்லி விட்டன. இவர்களை யாரும் திருத்த முடியாது, திருந்தவும் மாட்டார்கள்.

இறுதியாக அகரம் விளம்பரதாரர்களில் பலர் இன்னமும் மிகப் பெரிய தொகை செலுத்தாமல், காலங் கடத்துவதால் அகரம் மரண அவதியில் தவிக்கிறது. அருள் புரிந்து உடன் முதலுதவிச் சிகிச்சையாக ஒரு பகுதியாகிலும் உடனடியாகச் செலுத்தி, உயிர் காக்க அகரம் இரு கரம் கூப்பிக் கேட்டுக் கொள்கிறது.

**அன்புடன் அனைவரின்**
**உடல் நலமும் வேண்டி விடைபெறும்...**

**ஆசிரியர்,** அகரம் குழுமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

# அடுத்து என்ன?



> இறுதிப் போருக்குப்பின் நடந்த ஈழம் சார்ந்த போராட்டங்கள், விரல்விட்டு என்னும் அளவிலேயே இருக்கிறது. "ஒரு அடியிலேயே எதிரியை மட்டுமல்ல, உலகத்தையே கிடுகிடுக்க வைத்த ஒரு இனத்தின் போராட்டம் எவ்வளவு வேகமாக தன்னை உள்ளிழுத்துக் கொண்டுள்ளது?" என்று ஆய்வாளர் பரணி கிருஷ்ணராஜனி குறிப்பிட்டிருந்தார்.

புலிகளால் கிடுகிடுவென வளர்ந்து, மாபெரும் சாதனைகளை நிகழ்த்த முடிந்தது. ஆனால், அதே தமிழினத்தால் புலிகள் சாதித்ததில் ஒரு சதம் கூடப் பத்தாண்டுகளில் செய்ய முடியவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால்? புலிகளுடன் 2009-இல் புலிப் பண்பாடும் அழிந்தது. இன்று இருப்பது நண்டுப்பண்பாடு மட்டுமே!. இதற்கு எந்த ஒரு தனிமனிதனும் காரணம் அல்ல. பிழை பண்பாட்டில்தான் உள்ளது.

இன்றைய தமிழ்ச்சமூகம் ஓர் ஒத்துழைப்பற்ற சுயநல நண்டுச் சமூகம். இதை வைத்துக்கொண்டு ஓர் உருப்படியான உள்ளூர் ஆட்சி செய்யும் அமைப்பைக்கூட உருவாக்கமுடியாது. இதிலிருந்து தப்பிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழைக்க ஒரே வழிதான் இருக்கிறது. அதிலிருந்து விலகி, ஓர் அதி ஒத்துழைப்பானப் புலிப்பண்பாட்டுச் சமூகத்தை உருவாக்கி, சிறிதுச் சிறிதாக நண்டுகளைப் புலிகளாக மாற்றி, முழுச் சமூகத்தையும் புலிப்பண்பாட்டில் கொண்டு வருவதே வழி. அவ்வாறுதான் புலிகள் சிறு குழுவாக இருந்து, மாபெரும் இயக்கமாக வளர்ந்தார்கள்.

நபிகள் ஆரம்பித்த சிறிய குழு, உலகெலாவப் பரவி மாபெரும் நாகரீகமாக மாறியதும் இவ்வாறே. கிறித்தவமும் அவ்வாறே முழு ரோமப் பேரரசை விழுங்கியது. அவை அதி ஒத்துழைப்பான சமூகங்களாக இருந்ததனால்தான் இது சாத்தியமானது. ஆனால், ஒரு முக்கிய வித்தியாசம் என்னவென்றால், புலிகள் உருவாக்கியப் பண்பாடு மற்ற அனைத்தையும் விழுங்கும் மதசார்பற்ற அதியுயர் ஒத்துழைப்புப் பண்பாடு, இருபத்தொன்றாம் நூற்றாண்டுக்குத் தேவையானப் பண்பாடு (மதசார்பற்ற என்றால் கடவுள் மறுப்பு அல்ல, அனைத்து நம்பிக்கைகளையும் உள்ளடக்கியது).

புலிகள் இராணுவ உத்திகளில் உலகில் முன்னோடிகளாக இருந்தார்கள். புலிப்பண்பாட்டை உள்வாங்கிய தமிழ்ச்சமூகம், உலகின் அனைத்துத் துறைகளிலும் முன்னோடியாக இருக்கும். மொத்தத்தில் அனைத்திலும் புலியாக இருப்பார்கள். நோபல் பரிசுகளில் யூதர்களை விஞ்சினாலும் ஆச்சரியமில்லை. அனைத்திற்கும் தேவையானது ஒழுக்கம், அதில் புலிப்பண்பாட்டை யாரும் விஞ்ச முடியாது.

புலிகள் புலிப்பண்பாட்டை ஒரு இராணுவ அமைப்பிற்கு உருவாக்கினார்கள். ஆனால், அதை பொதுச் சமூகத்திற்கு ஏற்ப மாற்றுவது என்பது கடினமான வேலை இல்லை. எதிரிகளைக் கிடுகிடுக்க வைத்த புலிப்பண்பாட்டால், ஒன்றுக்கும் உதவாத நண்டுபண்பாட்டை ஒழித்து, மக்களை புலிப் பண்பாட்டிற்குள் இழுப்பது என்பது ஒரு கடினமான காரியமே இல்லை. அதுவும் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மக்கள் தொகையினர் புலிகளைத் தெய்வங்களாகப் பார்க்கும்பொழுது, இது செய்து முடிக்கக்கூடிய காரியமே!.

மக்கள் நண்டுப்பண்பாட்டில் வேறு வழி இல்லாமல்தான் இருக்கிறார்கள். ஓர் அதி ஒத்துழைப்பான மாற்று பண்பாடு இருந்தால், அவர்கள் தாமாக முன்வந்து இணைவார்கள். அவ்வாறுதான் புலிப் பண்பாடு முழு சமூகத்தையும் விழுங்க வேண்டும். அவ்வாறுதான் ஒத்துழைப்பைப் பெருக்கும், மதங்களும் வளர்ந்தன. பரிணாமம் என்பது போட்டி மட்டுமல்ல, ஒத்துழைப்பும் சேர்ந்ததுதான். எந்தப் பண்பாடு நன்றாக ஒத்துழைப்பைப் பெருக்கிப் பலம் பெறுகிறதோ, அவை பரிணாமப் போட்டியில் வெல்கின்றன.



FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போன்ற பண்பாட்டு மாற்றத்திற்கு ஒரு நல்ல உதாரணம் சப்பானியர்கள்தான். அன்றைய சப்பான் பல வர்க்க வேறுபாடுகளுடன் ஒருவித சாதிக் கட்டமைப்புடன் இருந்தது. படை வீரர்களான சாமுராய்கள் சமூகத்தில் உயர்நிலையில் இருந்தனர். இது நவீன சப்பானை உருவாக்கப் பெரியத் தடங்கலாக இருந்தது. வர்க்க வேறுபாடுகளை ஒழித்து; நவீன சப்பான் கட்டி அமைக்கப்பட்டது என்று ஏற்கனவே பார்த்தோம்.

"சாமுராய்கள் ஒழிக்கப்பட்டாலும், சாமுராய்களின் ஒழுக்கமும், பண்பாடும் ஒழிக்கப்படவில்லை. மாறாக அதை முழு சப்பானிய சமூகமும் உள்வாங்கிக் கொண்டது. இப்பொழுது உள்ளவர்களிடம் இரண்டு கத்திகள் இல்லை, ஆனால், ஒவ்வொருவரின் உள்ளுக்குள் ஒரு சாமுராய் இருக்கிறார். உதாரணமாக, ஆழமான அறிவியல் கருத்துகளைக் கொண்ட ஒரு சப்பானியரை உற்று நோக்கினால், அவருக்குள் ஒரு சாமுராய் தெரிவார்" என்கிறார் நிடோபே. இவ்வாறு அவர்கள் சாமுராய்களின் ஒழுக்கத்தை உள்வாங்கா விட்டால், நவீன சப்பான் உருவாகி இருக்குமா? என்பது சந்தேகமே!.

அதேபோல இரண்டாம் உலகப் போரில் சப்பான் சரணடையும் நிலை ஏற்பட்ட பொழுது, சரணடைவதில் விருப்பமில்லாத இராணுவ உயர் அதிகாரிகள், சாமுராய்களைப் போல தங்கள் வயிற்றைக் கிழித்து, வீரமரணம் அடைந்தனர். சாமுராய்களின் பண்பாடுதான் அவர்களை இன்றும் உள்ளிருந்து இயக்குகிறது.

ஒரு சமூகம் தனக்கு அளிக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டே அடுத்த கட்டத்திற்கு நகரும். இதை உலகில் அனைத்து நாடுகளின் வரலாற்றிலும் காணலாம். தமிழினத்திற்கு புலிகளின் வரலாறு கிடைத்துள்ளது. இதை நிராகரித்துவிட்டு, சமூகம் எதையும் செய்யமுடியாது. தமிழ்த்தேசியம் புலிகளை உள்வாங்கியே அடுத்த கட்டத்திற்கு நகரமுடியும். ஆனால், எதிரிகளுக்கு இது நன்றாகவே தெரியும். அதனால்தான் எதிரிகள் எப்படியாவது புலிகளின் வரலாற்றைத் தமிழர்களிடமிருந்து மறைத்து, அழித்துவிட வேண்டும் என்ற நோக்கில் செயல்படுகிறார்கள்.

சப்பானியர்கள் எப்படி சாமுராய்களின் பண்பாட்டை உள்வாங்கி, அனைவரும் சாமுராய்கள் ஆனோர்களோ? அதுபோலத் தமிழர்கள் அனைவரும் புலிப்பண்பாட்டை உள்வாங்கி, புலிகளாக மாற வேண்டும். அதுதான் தமிழ்த் தேசியத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு பலமான அடித்தளமாக அமையும். புலிகளை அழித்து விட்டோம் என்று கொக்கரிக்கும் எதிரிகளுக்கும், பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம் என்று ஒரு விடுதலை இயக்கத்தைக் கொச்சைப் படுத்துவோருக்கும், முழு சமூகமும் புலிகளாக மாறி நிற்பதுதான் சரியானப் பதிலாக அமையும்.








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பாண்டுக்கான நோபல் சமாதானப் பரிசு, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு உள்ளது. முதல் தடவையாக நோபல் பரிசுத் தெரிவுக் குழு ஓரளவேனும் நாணயமாக நடந்து கொண்டிருக்கின்றது என்ற ஆறுதலை இந்தத் தெரிவு தந்திருக்கின்றது. அதற்காக நோபல் பரிசுத் தெரிவுக் குழுவை ஒரு தடவை - முதற் தடவை - பாராட்டலாம்.

வழக்கமாக முதலாளித்துவ அரசியலை மையப்படுத்தியதாகவே, குறிப்பாகச் சொல்வதானால் அமெரிக்க மேலாதிக்கத்தை அல்லது மேற்குலகச் சிந்தனையை ஆதரிக்கும் நபர்களை அல்லது நிறுவனங்களையே நோபல் சமாதானப் பரிசுக்குத் தெரிவு செய்வது வழக்கம். இதனை வேறுவிதமாகச் சொல்வதானால் கம்யூனிச சித்தாந்தந்திற்கு எதிரானச் சிந்தனைக்கே நோபல் பரிசுத் தேர்வில் முதலிடம் கிடைக்கும்.

இதில் வேடிக்கை என்னவெனில்? அமெரிக்க அரசுத் தலைவராக பராக் ஒபாமா பதவியேற்ற முதலாவது ஆண்டிலேயே அவருக்குச் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஊடகர்கள் அவரை வினவிய போது அவர் அளித்த பதில்தான் இன்னும் வேடிக்கையானது. "எதற்காக எனக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டது என எனக்கே தெரியவில்லை" என்பதே அவரது பதிலாக இருந்தது.

இது தொடர்பாக நோபல் பரிசுக்கானத் தெரிவுக் குழு அளித்த விளக்கம் "ஒபாமா என்னவெல்லாம் செய்யப் போகின்றார்? என்பதை முன்கூட்டியே ஊகித்ததால் அவர் சமாதானப் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டார்" என்பதாக இருந்தது. "குவான்ரனாமா சிறைச்சாலையைத் தனது பதவிக் காலத்தில் மூடியே தீருவேன்" என்ற

# நோபல் சமாதானப் பரிசுபெறும் உலக உணவுத் திட்டம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




அவருடைய ஒற்றை வாக்குறுதியைக் கூட அவரது 8 வருட காலப் பதவிக் காலத்தில் அவரால் நிறைவேற்ற முடியவில்லை என்பதே நோபல் சமாதானப் பரிசின் யோக்கியதையை எமக்கு உணர்த்தப் போதுமானது.

என்றாலும், உலக உணவுத் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள நோபல் சமாதானப் பரிசை நாம் பாராட்டியே ஆக வேண்டும். அதன் பின்னணியில் உள்ள அரசியல் எதுவானாலும் நாம் கொண்டாடக் கடமைப் பட்டவர்கள். ஏனெனில், உலகெங்கும் வாழும் கோடிக் கணக்கானச் சாமானிய மனிதர்களின் பசியைப் போக்கி, அவர்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுகின்றப் பணியில் அந்த நிறுவனம் ஈடுபட்டிருப்பதாலேயே!.

101ஆவது நோபல் சமாதானப் பரிசை வென்றுள்ள உலக உணவுத் திட்ட நிறுவனம் 83 நாடுகளில் சுமார் 10 கோடி மக்களுக்குத் தினமும் உணவளித்து வருகின்றது. இதில் 7 நாடுகளில் அவசரகால அடிப்படையிலான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நிர்வாகச் சீர்கேடு, ஊழல் மலிந்த ஆட்சிகள், ஆயுத மோதல்கள் என்பவற்றோடுச் சேர்ந்து, தற்காலக் கொரோனாக் கொள்ளைநோயும் மக்களை அன்றாடம் பட்டினிக்குள் தள்ளி வருகின்றன.

உலகின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தியும், உலக மக்கள் தொகையின் அன்றாட பசியாற்றப் போதுமானதாக இருந்தாலும், தினமும் 69 கோடி மக்கள் வெறும் வயிற்றோடு உறங்கச் செல்கின்றார்கள் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டில் மாத்திரம் புதிதாக 55 நாடுகளைச் சேர்ந்த 13.5 கோடி மக்கள் இந்தப் பட்டியலில்

**பூமிபுத்திரன்**

இணைந்திருக்கின்றார்கள். இந்த வருடத்தில் இதுவரையான 9 மாதங்களில் 13.2 கோடிப் பேர் இந்தப் பட்டியலில் இடம்பிடித்து உள்ளார்கள்.

எனினும், உலகில் அன்றாடம் பட்டினி இருப்போரின் எண்ணிக்கை முன்னரை விடவும் குறைந்தே இருக்கின்றது. 1990 முதல் 92 வரையான காலப்பகுதியோடு ஒப்பிடுகையில், 30 கோடி மக்கள் பட்டினியில் இருந்து விடுபட்டிருக்கின்றார்கள். அன்று முதல் இன்று வரையான காலப்பகுதியில் உலக சனத்தொகையில் 1.9 வீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்தாலும், இந்தச் சாதனை



நிகழ்த்தப்பட்டு இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. சபையின் 36 உறுப்பு நாடுகளால் நிர்வகிக்கப்பட்டு வரும் உலக உணவுத் திட்டம், 2018ஆம் ஆண்டில் 7.5 பில்லியன் டொலரை அங்கத்துவ நாடுகளிடமிருந்தும், தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதியாகப் பெற்றிருந்தது. இதில், 2.5 பில்லியன் டொலரை ஐக்கிய அமெரிக்கா தனித்து வழங்கியிருந்தது. ஐரோப்பிய ஒன்றியம் ஒரு பில்லியன் டொலரை வழங்கியிருந்தது. இந்த நிதியாதாரத்தைக் கொண்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயற்பட்டு வரும் உலக உணவுத் திட்டம் அன்றாடம்; 5,600 பார ஊர்திகளையும், 30 கப்பல்களையும், 100 விமானங்களையும் சேவையில் ஈடுபடுத்தி வருகின்றது.

பட்டினி ஒழிப்பில் உலகளாவிய அடிப்படையில் சேவையாற்றிவரும் மிகப் பாரிய நிறுவனமான உலக உணவுத் திட்டம் 1961ஆம் ஆண்டில் பரீட்சார்த்தமாக 3 வருடத்துக்கென ஆரம்பித்து வைக்கப் பட்டது. அடுத்த வருடம் செப்டெம்பர் மாதம் ஈரானில் நிகழ்ந்த பூகம்பத்தால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்துக் களத்தில் இறங்கிய உலக உணவுத் திட்டம், உயிர்தப்பிய மக்களுக்கு நிவாரணங்களை உடனடியாக வழங்கித் தனது சேவை உலகிற்குத் தேவை என்பதை நிரூபித்துக் கொண்டது. இந்த நிறுவனத்தின் முதல் நிறைவேற்றுப் பணிப்பாளராக நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அட்டேக்கே ஹென்றி பொயாமே பதவி வகித்தார்.






அன்றுமுதல் இன்றுவரை உலகின் அனைத்துப் பகுதிகளிலும் சேவையாற்றிவரும் உலக உணவுத் திட்டம் 2030ஆம் ஆண்டில் உலகிலிருந்து வறுமையை முற்றாக ஒழிப்பது என்ற இலக்கை அடியொற்றிச் செயற்பட்டு வருகின்றது. 2015 ஆம் ஆண்டில் உலக நாடுகள் யாவும் இணைந்து நிலைபேறான அபிவிருத்திக்கான உலகளாவிய இலக்குகளை நிர்ணயம் செய்தன. 15 வருடங்களில் நிறைவேற்றப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 17 இலக்குகளில் 2 ஆவதே 2030இல் 'உலகளாவியப் பட்டினி ஒழிப்பு' என்பதாகும். இந்த இலக்கை எட்டுவது தனியே உலக உணவுத் திட்டத்தின் கைகளில் மாத்திரம் தங்கியிருக்க வில்லை.

மாறாக, ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் அனைத்துக்குமே இதில் பொறுப்பு உள்ளது. தத்தம் பொறுப்புக்களை உலக நாடுகள் ஒவ்வொன்றும் உணர்ந்துச் செயற்பட்டாலே, இந்த இலக்கை இலகுவில் எட்டிவிடலாம். அதற்கான முறையானத் திட்டமிடலும், செயலுறுதியும் அரசாங்கங்களுக்கு இருக்க வேண்டியது அவசியம். ஆனால், ஊழலில் மூழ்கித் திளைக்கும் அரசாங்கங்களும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயற்பாடுகளை ஊக்குவிக்கும் அரசியல் தலைவர்களும், பன்னாட்டு வர்த்தக நிறுனங்களின் சொல்கேட்டு நடக்கும் அதிகாரிகளும் நிறைந்திருக்கும் உலகில் இதுவெல்லாம் பகல்கனவு ஆகிவிடுமோ? என்ற பயம் இருக்கவே செய்கின்றது.

உலக உணவுத் திட்டத்தின் செயற்பாடுகள், உலகளாவிய அடிப்படையில் வரவேற்கப்பட்டாலும், விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. இதில் குறிப்பிடத்தக்க விமர்சனத்தை முன்வைத்தவர் கென்ய நாட்டைச் சேர்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலாளரான ஜேம்ஸ் சிக்வாற்றி. இவரைப் பொறுத்தவரை ஆபிரிக்காவிற்கு வழங்கப்படும் உதவிகள் நன்மையை விடவும் தீமையையே அதிகம் விளைவிக்கின்றன. "இத்தகைய உதவிகள் ஊழலைத் தூண்டுகின்றன. இந்த உதவிகளைத் திருடிக் கொள்ளும் அரசியல்வாதிகள், அவற்றைத் தாமே வழங்குவதாகக் கூறி வாக்குவேட்டை நடத்துகின்றனர் அல்லது கள்ளச் சந்தையில் மலிவாக விற்பனை செய்கின்றனர். இதனால் உள்நாட்டு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுகின்றது" என்கிறார்.

"ஒரு சமூகத்தில் வறுமை ஒழிக்கப்படும் போது, அந்தச் சமூகத்தில் உள்ள நபர்களின் தொழில் செய்வதற்கானத் தன்முனைப்பு ஒழிக்கப் படுகின்றது. இவ்வாறு வேலையின்மை நிலவும் சமூகத்தில் வேறு பிரச்சனைகள் உருவாகின்றன" என்பது அவரது வாதம். "ஆபிரிக்கக் கண்டத்தில் உள்நாட்டு விவசாயம் சீரழிவதற்கு உலக உணவுத் திட்டம் வழங்கும் உதவிகளும் ஒரு காரணம்" என்கிறார் அவர். அவரது


அகரம்

விளம்பரத் தொடர்புகளுக்கு

00 49 176 47 11 87 11


வாதத்தில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், பட்டினியால் அவதியுறும் ஒருவனுக்கு உடனடியாக உணவளிப்பதும் அவசியமானது அல்லவா?

ஆனால், ஜேம்ஸ் சிக்வாற்றியின் கருத்தை முன்மொழியும் வேறு பலரும் குறிப்பாக ஆபிரிக்காவில் இருக்கின்றார்கள். அவர்கள் மேற்குலக மனிதாபிமானத்துக்கு(?) எதிராகக் குரலெழுப்புபவர்கள். அவர்கள் முன்வைக்கும் பிரதானமான கேள்வி ஒன்றிருக்கின்றது. இன்று உலகில் வளமுள்ள பிராந்தியம் எதுவென்றால்? அது ஆபிரிக்காவே!. அப்படியிருக்கையில், மேலை நாடுகளின் அதிகளவு நிதியுதவியை எதிர்பார்த்துக் கையேந்தி நிற்கும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களாகவும் ஆபிரிக்கர்களே இருக்கின்றார்கள்.

இந்த நிலைக்கு யார் காரணம்? ஆபிரிக்கக் கண்டத்தின் வளங்களைக் கொள்ளையிட்டவர்கள் யார்? தொடர்ந்தும் கொள்ளையிட்டுக் கொண்டிருப்பவர்கள் யார்? எனவே மேற்குலகம் ஆபிரிக்காவின் கனிம வளங்களைக் கொள்ளையடிப்பதையும், ஊழல் ஆட்சியாளர்களுக்குத் துணை போவதையும் நிறுத்திக் கொண்டாலேயே ஆபிரிக்காவின் தலையெழுத்து மாறிவிடும் என்பது அவர்களின் கருத்து.

இந்தக் கருத்துக்கு வலுச் சேர்ப்பது போன்றே தரவுகளும் உள்ளன. உலக உணவுத் திட்டத்தின் நிதியுதவிகள் கிடைக்கும் நாடுகளைக் கண்டங்கள் அடிப்படையில் பார்த்தால் அதில் முதலிடம் வகிப்பது ஆபிரிக்காவே. உதவிபெறும் 83 நாடுகளுள் ஆபிரிக்காவைச் சேர்ந்த 44 நாடுகள் உள்ளன. ஆபிரிக்காவில் மெத்தம் 52 நாடுகளே உள்ள நிலையில் அதில் 44 நாடுகள் உதவிபெறும் நிலையில் இருப்பது என்பது தற்செயல் நிகழ்வாக இருக்க முடியாது.

அதேபோன்று, உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாக நீண்ட காலமாக அமெரிக்க முன்னை நாள் அரசியல்வாதிகளே நியமிக்கப்பட்டும் வருகின்றனர். எட்டாவது நிறைவேற்றுப் பணிப்பாளரில் ஆரம்பித்துத் தற்போதைய 13ஆவது நிறைவேற்றுப் பணிப்பாளர் வரை அமெரிக்கரே! - அதிலும் பட்டினி என்றால் என்னவென்று நிஜத்தில் தெரியாதவர்களே தொடர்ச்சியாக நியமனம் பெறுவதும் தற்செயல் நிகழ்வாக இருக்க முடியாது.

“பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதற்கு ஒப்பான செயல்” இதுவென நீங்கள் நினைத்தால், நான் மறுக்கவா போகின்றேன்!.


**Dortmund மாநகரில்....**

**தமிழர் அரங்கம் கல்விக் கூடம்**




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

ENESAR
N.S.R.

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்






மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்



ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**

**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**





Digitized by Noolaham Foundation.



சரவணன்

# தமிழீழ ஒறுப்புச் சட்டமும், பெண்களின் உரிமைகளும்!



சென்ற மாத தொடர்ச்சி...

## மறுமணம்

"மறுமணம்" விடயத்தில் அது இப்படிக் கூறுகிறது. "துணைவனோ, துணைவியோ உயிருடன் இருக்கும் போது அல்லது விவாகரத்து நடவாதிருக்கும் போது, அவர்களில் எவரும் மறுமணம் செய்யக் கூடாதென்றும், செய்தால் ஏழு ஆண்டுகள் வரை சிறைதண்டனை வழங்க வேண்டும். (**PCTE**-சரத்து **273**) எனக் கூறப்பட்டிருக்கிற போதும், அதன் "புறநடை" பகுதியில் திருமணமான எவரும் துணைவியைப் பற்றியோ, துணைவனைப் பற்றியோ தகவல் எதுவுமில்லாமலிருப்பின் 5 வருடங்கள் காத்திருத்தல் வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது.

திருமணமான எவரும் துணைவியைப் பற்றியோ, துணைவனைப் பற்றியோ தகவல் எதுவுமில்லாமலிருப்பின் 5வருடங்கள் காத்திருத்தல் வேண்டுமென சொல்லப்படுகிறது.

திருமண கட்டமைப்பு என்பதே அது ஆண், பெண் ஆகிய இரு சாரரினதும் சகல சுதந்திரங்களையும் கட்டுப்படுத்தும் நிறுவனம் என்பது அறிந்ததே. பெரும்பாலும் திருமண கட்டமைப்பினால் ஆணைவிட பெண், அதிக பாதிப்புக்குள்ளாகிறாள் என்பது இன்னொரு விடயம். இந்நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள "காத்திருக்கும் வரையறை" என்பது அத்தியாவசியமானதென கருதமுடியாது.

## பாலியல் வல்லுறவு

பாலியல் வல்லுறவு குறித்து பல விடயங்களை "பாலியல் வல்லுறவு குற்றம்" புரிந்த ஒருவருக்கு மரண தண்டனையோ அல்லது 14 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையுடன் கூடிய குற்றக்கா சிறுப்போ விதிக்கப்படுமென கூறுகிறது. (**PCTE** -சரத்து-279-(அ)) குற்றம் புரிந்தவர் 24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதையடையாதவராக இருப்பின், தண்டனையைக் குறைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. என்ற போதும், "பாலியல் வல்லுறவு" பற்றிய குற்ற வழக்கானது, அத்தவறு இழைக்கப்பட்டதிலிருந்து 3 மாதங்களுக்குப் பின் தொடரப்படலாகாது எனக் கூறப்பட்டுள்ளது. *(PCTE -சரத்து-283-(4))*

சில நிர்ப்பந்தங்கள் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ முதல் மூன்று மாதங்களுக்குள் வழக்கு தொடர முடியாமல் போனவர்களுக்கு, நீதித்துறை நீதி வழங்க முடியாது எனக் கூறுவது சரியான ஒன்றல்ல.


இச்சட்டத்தில் "பாலியல் வல்லுறவு", "பாலியல் வன்முறை" இரண்டுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் காட்டப்பட்டிருக்கிறது. அந்த வரையறை இதுவரை வேறு யாரும் செய்யாத ஒன்று என்ற ரீதியில் தமிழீழ ஒறுப்புச் சட்டத்திற்கு பெருமையுண்டு. உதாரணத்திற்கு,

"ஆண் குறியை சிறிதளவு பெண்குறியினுள் நுழைத்தாலும் "பாலியல் வல்லுறவு" நடைபெற்றதாகக் கொள்ளப்படும்" என்றிருக்கிறது. "பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவளது பாலியல் உறுப்புக்களில் பாலியல் உணர்வுடன் அல்லது அவரை இழிவுபடுத்தும் நோக்குடன் தீண்டுவது "பாலியல் வன்முறை"த் தவறாகும்" என்றும் கூறப்பட்டுள்ளது. என்றாலும், இது தொடர்பாக ஒறுப்புச் சட்டத்திலுள்ள பலவீனமென்னவென்றால், மேற்படி வரையறையிலிருந்து "பாலியல் வல்லுறவு" மற்றும் "பாலியல் வன்முறை" ஆகியன ஆணொருவன் ஆண் மீது அல்லது பெண், பெண் மீது பிரயோகிக்கப்படும் 'பாலியல் வல்லுறவு"களையும் பாலியல் வன்முறைகளையும் கண்டும், காணாது விடுவதா? என்ற கேள்வி எழுகின்றது.

மேலும் இன்று குடும்பங்களில் கணவனால் மேற்கொள்ளப்படுகின்ற பலாத்கார பாலியல் உறவுகளையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம்.

சமூக யதார்த்த நிலையில் பெண், ஆண் மீது பாலியல் பலாத்காரம் பண்ணுமளவு நிலைமை இல்லை என்பதை நாமறிவோம். சிலவேளை இது மிக அபூர்வமாகவே இடம் பெறும். ஆனால் ஆண், ஆண் மீது இக்குற்றத்தை இழைப்பது இன்று சாதாரணமாகி வருவதை நடைமுறையில் அறிய முடிகிறது.

இதை விட "பாலியல் வல்லுறவு" *(Rape)* மற்றும் "பாலியல் வன்முறை" *(Secual Violation)* என்பதைப் போலவே "பாலியல் தொந்தரவுகள்" *(Sexual Disturbances)* என்ற ஒன்றை வேறுபடுத்தி பார்க்க வேண்டிய அவசியமும் உள்ளது. குறிப்பாக பாலியல் வக்கிர நோக்கில் தீண்டுவது, இழி சொற்களைப் பயன்படுத்துவது, மற்றும் தொடர்பு சாதனங்கள், கலை வடிவங்களுக்கூடாக பாலியல் ரீதியிலான இழிவுகளைப் பிரதிபலிக்கச் செய்தல், அசிங்கப்படுத்திக் காட்டுதல் என்பவற்றை வேறுபடுத்தி இனங்காண வேண்டியதும் அவசியமானதாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வகையில் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளை வேறுபடுத்தி, இனங்காண்பது நீண்ட நோக்கில் நன்மைகள் பயக்கும். குறிப்பாக இது தொடர்பான தண்டனையளித்தலின் போதும், வேறுபடுத்தி பரிசீலிப்பதற்கு இது மிகவும் துணைபுரியும். எதிர்காலத்தில் இப்பாகுபடுத்தல் மேலும் விரிவடையலாம்.

இச்சட்டத்திலேயே முதற் தடவையாக "பாலியல் வல்லுறவு" எனும் பதம் தமிழில் பாவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் தமிழில் "கற்பழிப்பு" எனும் பதம் பயன்படுத்தப்பட்டபோது பெண்களுக்கு மட்டுமே கற்பின் தத்துவத்தை வலியுறுத்துவதாக அப்பதம் அமைந்திருந்ததாலும், பொருத்தமில்லாத சொல்லாக இருந்ததாலும், புதிய மாற்றுப் பதம் ஆக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக பெண்ணிலைவாதிகளால் கருத்தாடப் பட்டதைத் தொடர்ந்து "பாலியல் பலாத்காரம்" மற்றும் "பாலியல் வன்முறை" ஆகிய பதங்கள் அறிமுகப் படுத்தப் பட்டன.

இப்பதத்தை அறிமுகம் செய்ததில் "சரிநிகர்" பத்திரிகைக்கு மிகுந்த பங்குண்டு. ஆனாலும் "பாலியல் பலாத்காரம்" மற்றும் "பாலியல் வன்முறை" ஆகிய பதங்களில் "பாலியலுறவு" என்பது உள்ளடக்கப் படவில்லை என பல பெண்ணிலை வாதிகளால் பேசப்பட்டது. இந்நிலையில் தமிழீழ ஒறுப்புச் சட்டம் அறிமுகப் படுத்தியிருக்கிற "பாலியல் வல்லுறவு" எனும் பதத்தில் பாலியல் **(Sexual)** + வன்மை **(violence)** + உறவு **(intercource)** ஆகிய மூன்று விடயமும் உள்ளார்ந்திருப்பதால் இப்பதமே பொருத்தமானது என்பதைப் பலர் ஏற்றுக் கொள்கின்றனர். சில வேளைகளில் இதை விட நல்ல பதம் எதிர் காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம்.

## பரத்தமை

"பரத்தமை" (பாலியல் தொழில்) பற்றி இன்னமும் நமது சமூகத்தில் நிலைபெற்றிருக்கிற கருத்தியல் காரணமாக பரத்தமையை குற்றத்திற்குரிய ஒன்றாகவே காண்கிறதே ஒழிய, அதற்கான ஒட்டு மொத்தமான சமூக நிர்ப்பந்தத்தை இனங் காண்பதில் தவறிழைத்தே வருகிறது.

பரத்தமையில் ஒரு பெண் ஈடுபடுவதற்குக் காரணமாக பெண்ணின் பாலியல் மேலுணர்வை கொள்ள முடியாது. அதற்கான சமூகச் சூழலே பரத்தமை நிலையினை அடையக் காரணமாக இருக்கிறது. எனவே, அந்தச் சூழல் மாற்றியக்கப்படாதவரை இவற்றிற்கான தீர்வுமில்லை.

"காசு நோக்கத்திற்காக ஒரு பாலார் மறுபாலாருடன் உடலுறவு கொள்ளுதல் "பரத்தமை" தவறாகும். இத்தவறுக்கு நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய இருவகையிலொருவகை சிறையொறுப்பு வழங்கப் படுதல் வேண்டும்" (**PCTE** -சரத்து **(481),(420)**).

பரத்தமை விடயத்தில் எப்போதும் பெண்ணே தண்டிக்கப்பட்டு வரும் இயல்பை நாம் காணலாம். "பணம் கொடுத்து பாலியல் புணர்ச்சிக்கு அழைப்பதற்கு ஆண்கள் தயாராக இருக்கும் போது, பெண் மட்டும் ஏன் தண்டிக்கப்படுகிறாள்?" என வினவுகிறார் பெண்ணிலைவாதிகளில் ஒருவரான சுனிலா அபேசேகர.

இக்கேள்வியின் நியாயத் தன்மை சரியானதே!. லஞ்சக் குற்றச்சாட்டின் போதெல்லாம் லஞ்சம் வாங்கியவரை மட்டுமல்லாது, லஞ்சம் வழங்கிய வரையும் தண்டிக்கும் இந்தச் சட்டங்கள், பரத்தமை விடயத்தில் மாத்திரம் பரத்தமையை தூண்டும் ஆண்களைத் தப்ப விட்டுவிட்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை மட்டும் தண்டிப்பது மிக மோசமான நடைமுறை.

மேலும் "விபச்சாரி" அல்லது "வேசி" என்று இறுதியில் தூற்றப்படும் செய்கை கூட பெண்களுக்கு எதிராக மாத்திரமே பாவிக்கப்படுகிறது. இவ்வகையான பதப் பிரயோகம் கூட ஆண் மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் பதப்பிரயோகமே!. அப்பதங்களை பெண்கள் மீது மட்டுமே பிரயோகிக்க ஆணாதிக்கம் முயல்கிறது.

ஆண்கள் பல பெண்களுடன் பாலியலுறவில் ஈடுபட்டால் அவனை "விபச்சாரன்" அல்லது "பரத்தன்" போன்ற பதங்களைப் பாவிப்பதற்கான தமிழ்ச் சொல் வழக்காடல் இன்னமும் இல்லை. பெண்ணே தொடர்ந்தும் அவதூறுக்கும், அவமானத்துக்கும் உள்ளாகிறாள்.

இப்படி "தமிழீழ ஒறுப்புச் சட்டம்" தயாரிக்கப்படும் போது, பெண்கள் தொடர்பான விடயங்களில் பிற்போக்கான பார்வையைக் கொண்டிருப்பதாகவோ, ஆழமான தூரநோக்குடையதாகக் இருப்பதாகவோ கொள்ளமுடியாது. ஒறுப்புச் சட்டத்தில் இதுவரை காணாத பல புதிய நல்ல கருத்துகளுடன் கூடிய சட்டமியற்றல் நடைபெற்றிருக்கிற போதும், சிற்சில பலவீனங்களை உள்ளடக்கியிருப்பதை உணராது விட முடியாது. அதிலுள்ள "பெண்கள்" பற்றிய சிறு மதிப்பீடு மட்டுமே இதில் அடங்கியிருக்கிறது.

எதிர்காலத்தில் தமிழீழச் சட்டம் நடைமுறைக்கு வரும்காலத்தில், மேலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படுமாயின், உலகில் தலைசிறந்த சட்டமாக தமிழீழச் சட்டம் அமையும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் மறக்கமுடியாத கலைச் செல்வம்

"கலைமாமணி" முகத்தார்

# எஸ்.யேசுறட்ணம்



இத்தாலியில் பைசா நகரத்தில் அமைந்திருக்கும் சாய்ந்த கோபுரத்திற்கு மதிப்பே, அது சாய்ந்து இருப்பதுதான்! ஆனால், கலைத்துறையில் முகத்தாருக்கு இருக்கும் மதிப்பு, அவர் வாழ்ந்த காலம்வரை நான் ஒரு நடிகன் என்ற இறுமாப்போடு நிமிர்ந்து நின்றதுதான்!. கலைத்துறையில் தஞ்சைப் பெரிய கோவிலின் ராஜகோபுரம் போல வாழ்ந்த முகத்தார் யேசுறட்ணம் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துப் பத்து ஆண்டுகள் நிறைந்து விட்டாலும், அவரது நினைவுகள் மறையாமலேயே இருக்கின்றது. அவர் விட்டுச்சென்ற இடம் நிரப்பப் படாமலேயே இருக்கின்றது.

அனைவரது நாவிலும் நல்லதோர் மனிதர், நல்லதோர் நடிகர் என இன்று வரை பேசப்பட்டுக் கொண்டிருப்பவர் எங்கள் முகத்தார் யேசுறட்ணம் ஐயா அவர்கள். வாழ்க்கையிலும், கலைத்துறையிலும் இவர் ஒரு நிறைகுடம், என்றுமே தழும்பிய தில்லை!. இவரைப்பற்றிச் சொல்வதற்கு நிறையவே இருக்கின்றது! ஆனாலும் நான் இங்கு கொஞ்சமாகத்தான் சொல்லப் போகின்றேன்

வசதியானக் குடும்பத்தில் பிறந்தவர்! தந்தையார் பெரும் வர்த்தகர், தாயார் ஒரு ஆசிரியை, வெள்ளித் தட்டில் நெல்லுச் சோறுப் போட்டு, அள்ளித் தீர்த்தி வளர்த்தச் செல்லப்பிள்ளை இவர். அரசாங்கத்தில் உயர்ந்தப் பதவியில், பை நிறைய ஊதியம் பெற்றிருந்த வேளையிலும், கலைக்கே முன்னுரிமை கொடுத்தவர்.

:இலங்கை வானொலியைப் பற்றிக் கொஞ்சமாகத் தெரிந்தவர்கள்கூட முகத்தாரைப் பற்றி நிறையவே தெரிந்து வைத்திருப்பார்கள்! அப்படித் தெரியாதவர்கள் யாரேனும் இருந்தால் அது அதிசயமகத்தான் இருக்கும்.

இலங்கை வானொலியில் இவர் எழுதி, நடித்து, நெறியாழ்கை செய்த "முகத்தார் வீடு" நாடகம் 268 வாரங்கள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடராக ஒலிபரப்பாகி பெரும் சாதனையைப் படைத்தது. திரு. சந்தியாப் பிள்ளை- யேசுறட்ணம் அவர்களை இந்த நாடகத்திற்குப் பின்னர் இவரின் தந்தையாரின் பெயரை பின்னுக்கத் தள்ளிய ரசிகர்கள் இவரை முகத்தார் யேசுறட்ணமாக மாற்றிக் கொண்டார்கள்.

"வாடைக் காற்று" திரைப்படத்தில் வந்த பொன்னுக் கிழவர் இன்றும் ஈழத்துக் கலைகளை நேசிப்பவர்களால் மறக்கப்படாமல் ரசிகர்களின் உள்ளங்களில் உலா வந்து கொண்டிருக்கின்றார் என்றால்;, முகத்தார் அங்கே பொன்னுக் கிழவனாக மாறியிருந்தமைதான்! மற்றும் இலங்கையில் தயாரான "ஏமாளிகள்" "கோமாளிகள்" போன்ற திரைப்படங்களிலும் முகத்தார் தனது திறமைகளை வெளிப்படுத்தி யிருக்கின்றார். அது மாத்திரமல்ல, தனது முகத்தைக் காட்டாது "பொன்மணி" "கலியுக காலம்" போன்ற திரைப்படங்களில் குரலால் நடித்துச் சிறப்பூட்டியிருக்கின்றார்.

இலங்கை வானொலியில் "கதம்பம்" என்ற நிகழ்ச்சியினூடாகத் தொடர்ந்து 123 வாரங்கள் தான் எழுதிய தனி நாடகங்களை அரங்கேற்றியிருக்கின்றார். "பருவக் காற்று" என்ற இவரது இன்னொரு நாடகம் 52 வாரங்கள் தொடராக ஒலிபரப்பாகி யிருக்கின்றது. இப்படியாக இருபத்தி இரண்டு வருடங்களாக (1966-1988) இலங்கை வானொலியில் பகுதி நேரமாகக் கடமையாற்றி, வானொலியின் முழு நேயர்களையும் முழு நேரமும் தன்பால் ஈர்த்துக் கொண்ட முகத்தாரின் இந்தச் சாதனைகளை முறியடிக்க, இன்னொரு முகத்தார்தான் உருவாக வேண்டும்! இவரோடு கலைப் பணியாற்றிய சக கலைஞர்கள் சொல்லுவார்கள்.

268 வாரங்கள் இலங்கை வானொலியில் ஒலித்த "முகத்தார் வீடு" நாடகத்தை, இவர் புலம் பெயர்ந்து பாரிஸில் வாழ்ந்த காலத்தில் இன்று தனது "கலைத் தென்றல்" இருபத்தைந்தாவது ஆண்டில் முத்திரை பதித்துக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் ஆர்.ரி.எம் பிரதேஸ் நிறுவனத்தினர் இரண்டு மணி நேரமான திரைப்படமாக்கி வெளியிட்டு, அந்நாடகத்திற்கும், முகத்தார் ஐயா அவர்களுக்கும் மகுடம் சூட்டி வைத்துள்ளார்கள்.


"முகத்தார் வீடு" - காட்சி

முகத்தார் அவர்களின் தடித்த குரல், முறுக்கு மீசை, முகபாவம், வசீகரமான சிரிப்பு, யாழ்ப்பாணத்துத் தமிழ், அதனை உச்சரிக்கும் விதம் இவையெல்லாம்தான் இவரைக் கோபுரத்தின் உச்சியில் ஏற்றி வைத்தது. இத்தனை புகழ் வாய்ந்த கலைஞனை ஒரு தடவை பத்திரிகை ஒன்றிற்காக நான் செவ்வி கண்ட போது அவர் கூறிய பதில்கள் சுவார்சியமானது! அச்செவ்வியில் இருந்து ஒரு சில பதில்கள்ஞ்

**தங்கள் வானொலிப் பிரவேசம் எப்படி? எப்போது?**

"அன்றைய நாட்களில் பாராளுமன்றத்திற்குச் சீற்றுக் கிடைத்து விடும்! ஆனால், இலங்கை வானொலிக்குள் நுழைவது அவ்வளவு சாதாரணமான விடயம் அல்ல! 1966ம் ஆண்டு ஆடி மாதம் 26ம் திகதிதான் எனது முதல் வானொலிப் பிரவேசம். அன்று குரல் தேர்வுக்காகச் சென்ற நான், பின்னர் பிரதி தயாரித்தல், இயக்குனர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் எனப் பல உயர்நிலைகளை அடைந்தேன்."

**இலங்கை வானொலியில் ஒரு நாடகத்திற்கு ஆகக்கூடியது 52 வாரங்கள்தான் அனுமதி வழங்கப்படும் என அறிந்தேன். தங்கள் "முகத்தார் வீடு" நாடகம் 268 வாரங்கள் ஒலிபரப்பானது! இது எப்படிச் சாத்தியமானது?**


"அந்த நாட்களில் இலங்கை வானொலியில் தொழில் நுட்பவியலாளாராக இருந்து, பின்னர் கிராமிய நிகழ்ச்சிப் பொறுப்பாளராக திரு டேவிட் ராஜி இந்திரன் அவர்களின் வேண்டுகோளுக்கு அமையவே, இந்த நாடகம் உருவாக்கப் பட்டது. இதனை ஆரம்பித்து வைத்தவர் விவசாயத் திணைக்கள விரிவாக்கப் பொறுப்பாளர்களாக இருந்த திரு ஸ்ரீபத்மநாதன், திரு.ஸ்ரீகாந்தராஜா. இந்த முக்கோண இணைப்பால்தான் இது சாத்தியமாயிற்று. ஆரம்பத்தில் 52 வாரங்களுக்குக்கூட கதை தயாரிக்கப் படவில்லை! வாரங்கள் தொடரத் தொடர கதைத் தானாகவே வளர்ந்தது! பின்னர் 268 வாரங்களானதும் நாங்களாகத்தான் நிறுத்தினோம்"!.

**உங்கள் படைப்புகள் அடிமட்டத்தை அடித்தளமாகக் கொண்டதன் மர்மமென்ன? தனிப்பட்ட முறையில் ஏதாவது தாக்கமா? அல்லது....?**

"சமூகம் தாக்கப்படும்போது நானே தாக்கப்படுவதாக ஒரு பிரமை! நானும் சமூகத்தில் ஒருவர்தானே!. நான் எழுத்தாளனாகவும், படைப்பாளியாகவும் இருப்பதால் சமூக மேம்பாட்டை வரைந்திருக்கின்றேன். அவ்வளவுதான்."

இப்படியாக ஒரு நீண்ட செவ்வியை வழங்கியிருந்தார். இனி வரும் நூறாண்டு காலம் இவர் பெயரைச் சொல்லும்படியாக தான் வாழ்ந்த காலத்திலேயே தனது நாடகங்களில் பன்னிரண்டு நாடகங்களைத் தொகுத்து "முகத்தார் வீட்டுப் பொங்கல்" என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். இவர் அமரத்துவம் அடைந்த பின்னர், இவரது பிள்ளைகள் இவரின் வானொலி நாடகங்களில் பன்னிரண்டு நாடகங்களைத் தெரிவு செய்து, "ஆகாயக் கனவுகள்" என்னும் பெயரில் ஒலித்தட்டாக வெளியிட்டதோடு, தான் வாழ்ந்த காலத்தில் தனது கைப்பட எழுதிவைத்தத் தனது மலரும் நினைவுகளை "நானும் நீயும்" என்னும் பெயரில் புத்தகமாக வெளியிட்டு, முகத்தாரை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**
Monbijoustrasse 29, 3001 Bern
☎ 058 473 24 45 058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch



www.generali.ch 076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

**வருமானக்காப்புறுதி**
**EINKOMMENS - VERSICHERUNGEN**
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

**சேமிப்புக்காப்புறுதி**
**SPARVERSICHERUNGEN**
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

**ஆயுட்காப்புறுதி**
**LEBENSVERSICHERUNGEN**
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

**வாகனக்காப்புறுதி**
**FAHRZEUGEVERSICHERUNGEN**
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

**வீட்டுக்காப்புறுதி**
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

**சட்டக்காப்புறுதி**
**RECHTSSCHUTZVERSICHERUNG**
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

**மருத்துவக்காப்புறுதி**
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

**வீட்டுக்கடன்**
**HYPOTHEKEN**
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவன்**

# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி





> சர்ச்சைக்குரிய இராணுவ முறைமைகளைப் புலிகள் பயன்படுத்துவதாக வலுவான ஊடகப் பிரச்சாரம் செய்ததன் மூலம், உலக அரங்கில் புலிகளைப் பயங்கரவாதிகளாக்கிய இலங்கை
>
> **- Shlomi Yass**
>
> (Military and Strategic Affair, Institude for National Security Studies)

பயங்கரவாதம் என்ற சொல்லுக்குள் விடுதலைப்புலிகளை அடக்குவது, சிக்கலான தன்மையைக் கொண்டதாக இருக்கிறது. ஏனெனில், பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு உலகளவில் ஏற்றுக் கொள்ளப் பட்ட வரையறைகள் இன்றுவரை இல்லை. நூற்றுக்கும் மேற்பட்ட சிக்கலான வரையறைகள் கொண்ட சொல் இதுவாகும். ஓர் அரசியற் பரிசீலனைக்கான சொல், கருத்தாய்வுகளின் விளைவாகக் கண்டறியப்படுவதாக இருக்கவேண்டும். இச்சொல் இன்றுவரை ஒத்திசைவான, வரையறையைக் காண்பதற்கான முயற்சிகளை விடுத்து, குறுகிய நலன்களுக்கானச் சொல்லாகவே இருக்கிறது. இன்றைய நடைமுறையில் உலகைத் தரப்படுத்துவதிலும், பொறுப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள், சட்ட விவகாரங்கள் ஆகியவை மங்கிப்போகவும் வழிவகுக்கிறது.

ஒவ்வொரு தேசத்தினுடைய உறுதித்தன்மையும், அதனுடைய சட்டத்தினுடைய அளவை வைத்தே நிர்ணயிக்கப்படுகிறது. பலர் அதை 'நியாயத் தன்மை' என்ற வார்த்தையாக உபயோகித்தாலும், சிலர் அதை வரையறை செய்கிறார்கள். 'நியாயத் தன்மை' என்பது அந்த சட்டத்தைப் பார்க்கும் மக்களின் பார்வையினால் உருவாகும் மனநிலையின் வெளிப்பாடு. எனவே, இது தார்மீகமான, நெறிமுறையான, சட்டங்களை உள்ளடக்கியப் பரந்த அளவிலான விளக்கங்களை உள்ளடக்கியது. எனவே, மேற்கூறிய சட்டபூர்வமானத் தன்மைகள் மூலம் ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு தன்னுடைய இருப்பை நியாயப்படுத்த முடியும்.

அரசியல் நியாயத் தன்மையைப் பெற்ற நிறுவனம் அல்லது அமைப்பு, ஆட்சி செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது என்றே சொல்லவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குறிப்பிட்டச் சமுதாயத்தின் நம்பிக்கையைப் பெறுவதன் மூலம் அவ்வமைப்பு அல்லது நிறுவனம் ஆட்சி செய்வதற்கு அல்லது அரசியல் செய்வதற்குப் பொருத்தமானவை என்ற பெயரைப் பெற்றுக்கொள்கின்றன. ஆட்சியின் நியாயத்தன்மை என்பது, மக்கள் அதைப் பின்பற்றுதல், சட்ட அமுலாக்கத்தை ஏற்றுக் கொள்ளுதல், விதிமுறைகளை மதித்தல் என்பன மூலம் உறுதி செய்யப் படுகிறது. (உதாரணமாக, தமிழீழக் காவல் துறை, வங்கி, நீதிமன்றம், நிர்வாகத்துறை ஆகியவற்றின் சட்டங்கள் தமிழீழ மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டதானது, நியாயத்தன்மை மீதான நம்பிக்கையின் வெளிப்பாடே ஆகும்.)

மேற்கூறப்பட்ட விதிமுறைகள் எதுவுமற்ற நிலையிலும் சட்டம் என்பதை வரையறை செய்யமுடியும். அதற்கு உதாரணம்; இசுரேலைப் பிரதிநித்துவப் படுத்தும் யூதர்கள்.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு குறிப்பிட்டப் புள்ளியில் 42 தமிழ்க் குழுக்கள் இலங்கையில் இயங்கின. ஆனால், அரசியல் அமைப்பில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய பொருள் கொண்டக் குழுக்கள் எதுவும் இருக்கவில்லை. 1976இல் பதினெட்டு வயதான அடையாளம் தெரியாத ஒருவர், தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற அமைப்பை ஆரம்பிக்கிறார். அவரது இறுக்கமான, வசீகரமான தலைமைத்துவமே மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அவ்வமைப்பை வழிநடத்தும் தகுதியை அவருக்குத் தந்தது. அவர் பெயர் பிரபாகரன்.

விடுதலைப்புலிகளை வெல்ல முடியாத இலங்கை அரசு, சர்ச்சைக்குரிய இராணுவ முறைமைகள் மூலம், 11.09.2011இன் பின்னர் உலக அரங்கில் புலிகளைப் பயங்கரவாதிகளாக்குவதில் வெற்றி கொண்டது. ஏனெனில் அமெரிக்க இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதல், பயங்கரவாத அமைப்புகள் மீதான அணுகுமுறையில் உலகளாவிய மாற்றங்கள் ஏற்படவிருந்ததை ஊக்குவித்தது. நேரலையாக வழங்கப்பட்டக் காட்சிகள் சர்வதேசச் சமூகத்தை அதிர்ச்சிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளாக்கியது. (அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் நேரலை செய்யப்பட்டதில் முக்கியமான செய்தி இருக்கிறது. உலகளாவிய முறையில் மக்களின் அனுதாபத்தைப் பெற்று, தமது நடவடிக்கைகளுக்கான ஊக்குவிப்பைப் பெற, அமெரிக்கா நடத்திய திட்டமிட்ட செயற்பாடே, தாக்குதலை நேரலை செய்யும் முடிவாகும்)

மேற்கண்ட நேரலை மூலமான அரசியலை இலங்கையும் கற்றுக்கொண்டது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும், ஒழுங்கமைப்பட்ட ஊடகப் பிரச்சாரத்துடன் உலகளாவிய பொதுக் கருத்தொன்றை விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் பதிவு செய்வதில் இலங்கை அரசு வெற்றிகொண்டது. (தமிழர் தரப்பில் சமாந்தரமாக உலகப் பொதுமொழியான ஆங்கிலத்தில் எவ்விதக் காட்சி ஊடகங்களும் இருக்கவில்லை)

இவ்வாறு சிறிலங்கா அரசு தீவிரமாகத் தொடர்ச்சியாக மேற்கொண்ட நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளின் நியாயத்தன்மை இற்றுப்போக வழிவகுத்தன. சமாந்தரமாக, இலங்கை அரசின் நடவடிக்கைகள் அனைத்துமே நியாயத் தன்மைக்கானப் போராக வடிவமைக்கப்பட்டு, ஊடகங்களில் வெளியிடப்பட்டன. அதனால்தான் குறிப்பாக 2009இல் நடந்தப் போரின் கடைசி மாதங்களில், விடுதலைப்புலிகள் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று உலகநாடுகள் நம்பி, இலங்கை இழைத்த மனிதகுலத்திற்கு எதிரானக் குற்றங்களைக் கருத்திலெடுக்கவில்லை. இலங்கை அரசு "பயங்கரவாத நாடு" என்று ஒருபோதும் முத்திரை குத்தப்படவில்லை. (ஏனெனில் ஊடகப் பிரச்சாரத்தில் ஏற்கனவே விடுதலைப்புலிகளைத் தீவிரவாதிகளாக இலங்கை அரசு காட்டியபோது, பதில் பிரச்சாரப் பதிவுகளை விடுதலைப்புலிகள் மேற்கொள்ளத் தவறியிருந்தார்கள்)

இலங்கை அரசு பயங்கரவாத அரசு இல்லை என்றால், எப்படி அந்நாட்டிற்குள் புலிகள் பயங்கரவாதிகள் ஆனார்கள் ?

இது உண்மையில் அதிவேகமாக நடந்து முடிந்த, அவசர அவசரமாக எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவேயாகும். பாலி தீவில் 2002 இல் நடைபெற்ற குண்டுவெடிப்பும், 2004 இல் மட்ரிட் இல் இடம்பெற்ற குண்டுவெடிப்பும், இலண்டனில் 2005இல் நடைபெற்ற குண்டுவெடிப்பும், ஏனைய இதர குண்டுவெடிப்புகளும் 'தீவிரவாதம்' என்ற சொல்லிற்கு எதிரான எதிர்வினைகளை ஆற்ற, உலகை உந்தித்தள்ளியது. சமவேளையில் இலங்கையும், விடுதலைப்புலிகள் பற்றிய மோசமான அறிக்கைகளை முன்வைக்க, உலகம் விடுதலைப்புலிகளையும் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துக்கொண்டது.

ஓர் கிராமத்திலுள்ள 5வீடுகளில் சம நேரத்தில் திருடு நடக்கும்போது, ஆறாவது வீட்டுக்காரனும் 'என்வீட்டிலும் திருடு போய்விட்டது' என்று பொய் சொன்னால், அவரை யாரும் தனித்துக் கேட்கப்போவதில்லை. அவ்வாறே விடுதலைப்புலிகளும் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்டது, உலகிற்கு ஒரு தற்செயல் நிகழ்வாக இருக்கலாம், ஆனால், அது இலங்கைக்கு மாபெரும் வெற்றி, தமிழருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்பதே உண்மை.

MEDIA ASIA
Another Home of Southasian Channels
For satellite news, live radios, TV-Guide,
Radio-schedules,
contact details of Tamil channels in the world etc.
www.mediaasia.in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நாடுகளை விடவும் இசுரேலிய அரசு, தமிழர் தரப்பை அழிப்பதற்கு முன்நின்றது என்பதையும் ஆதாரத்துடன் தெரிவிக்கிறார் கட்டுரையாளர். இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் கடற்கரைக்கு அருகில் இசுரேலிய நீர்மூழ்கிக் கப்பல்கள் **Popeye** ஏவுகணைகளின் சோதனை ஏவுதல்களை மேற்கொண்டன. அவை அணுசக்தியைச் சுமக்கும் திறன் கொண்டவை. ***(Popeye Turbo," Federation of American Scientists, June 20, 2000).*** இசுரேல் தனது பரிசோதனைத் தளமாக, இலங்கையைப் பாவிப்பதற்காக, இலங்கை இராணுவத்திற்கு ஏராளமான நீருந்து விசைப்படகுகளையும், ***Kfir*** தாக்குதல் விமானங்களையும் வழங்கின. இது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிகுந்த இழப்பை ஏற்படுத்தியிருக்க வல்லன.

(2008 இல் ஈரானிய அதிபர் ***Mahmoud Ahmadinejad***வும், மகிந்த இராஜபக்சவும் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி, 1.9 பில்லியன் டொலர் மென்கடன் இலங்கைக்கு வழங்கப்படுவதனால், இலங்கையானது ஈரான் கைகளுக்குள் சென்றுவிடுமோ, என்ற பயத்தின் காரணமாக இசுரேல் அதிகப்படியான இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்கியது.- ***Iranian President Visits Sri Lanka," USA Today, April 28, 2008)***

தமிழீழ விடுதலைப் போரை நசுக்குவதற்காக, இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்ட பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு, தமக்கும் இலங்கைக்கும் இருந்தத் தொடர்புகள் பற்றிய இருநூறுக்கும் மேற்பட்ட கோப்புகளை 2018இல் அழித்து விட்டிருக்கிறது. இவற்றுள் ***MI 5*** மற்றும் ***Special Air Service (SAS)*** ஆகியன இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள், பயிற்சிகள் ஆகிய தரவுகள் அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கின்றன. இன அழிப்பு, அரசுகள் தமது இரத்தக்கறைப் படிந்த கைகளை வரலாற்றில் இருந்து கழுவிக்கொள்வதற்காக மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையில், தென்யாவில் பிரித்தானிய அரசு மேற்கொண்ட சதி நடவடிக்கைகள் பற்றிய தரவுகளும் அழிக்கப்பட்டுள்ளன.

***(Phil Miller - The Guardian)***







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**நான் கொரோனாவோட வாழுறன் பாருங்கோ. இனி கொரோனா இல்லாத ஆக்களைத் தான் தனிமைப்படுத்த வேண்டிவரும் போல இருக்கு. அப்பிடி இருக்குது நிலைமை!. நாங்கள் சாதாரண உயிரினங்களைப் போல வாழ வேண்டிய நிலைக்கு வந்திட்டம் பாருங்கோ. ஏதோ கண்டது, நிண்டது எண்டு வருத்தம் வந்தாலும், அதையும் கொரோனா எண்டு சந்தேகப்பட்டு அல்லோலப் படவேணும் போலக் கிடக்கு. இதுதான் கலிகாலம் போலக் கிடக்கு.**

சரி அது கிடக்கட்டு. உதெல்லாம் நடந்தாலும் மற்ற விசயங்களும் நடந்துகொண்டு தான் இருக்கு பாருங்கோ!. 'எரிக் சொல்கைம்' எண்டொரு சர்வதேசத் தரகர் தன்னை முற்றும் துறந்த முனிவராக அடையாளப் படுத்திக் கொண்டு, தமிழர்களுக்கெதிரான நச்சு விதைகளைத் தூவ ஆரம்பிச்சுட்டார் பாருங்கோ!. அவர் தன்னை அடையாளப்படுத்தத் தேவையில்லை. ஏனெண்டால் அவர் ஆரெண்டு தமிழர் தலைமைக்கு எப்பவோ தெரியும் பாருங்கோ. ஆனால், அவருடைய பொய்ப் பிரட்டுகளுக்கு எதிராக உலகம் எங்கும் பரந்து வாழுற குழுக்கள், அமைப்புகள் என்ன செய்தவை? எண்டொரு கேள்வி இருக்குதல்லோ. இதைப்பற்றித்தான் சொல்லவேணும் பாருங்கோ.

2009 வரை நடந்த ஆயுதப்போராட்டம், தமிழர் தரப்பின் நியாயங்களை ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை பாருங்கோ. தமிழர் இறையாண்மை எண்டா என்னவெண்டு அந்தத் தலைமைக்கு நன்கு தெரியும் கண்டியளோ?. ஆனால், 2009க்குப் பிறகு, அந்தத் தலைமை உலகம் முழுவதும் உருவாக்கிவிட்ட அமைப்புகளே, அந்தத் தலைமையின்ர கோட்பாடுகளுக்கெதிராகவும், இறையாண்மைக்கு எதிராகவும் செயற்பட ஆரம்பிச்சது உலகறிஞ்ச விடயம். மாவீரர் நாளையும், இனஅழிப்பு நாளையும் நடாத்தினா போதும் எண்டு நினைச்சுக்கொண்டு, வருவாயை மாத்திரம் குறியாகக் கொண்டு செய்யுற வேலைகளில மூழ்கி இருக்கிற அவையால வேற எதையும் எதிர்கொண்டு வினையாற்ற முடியேல்லை எண்டுறதுதான் நிதர்சனம். காரணம் பயம் தான் பாருங்கோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையை நேசிச்சுக்கொண்டு எங்கட மக்கள் செய்யுற சாதாரண வேலைகளைக்கூட எதிர்க்கிற உந்தக் கூட்டங்கள் இனத்துக்கெதிராகவும், எங்கட தலைமைக்கெதிராகவும் அறிக்கை விடுற ஒரு மேற்குலக நரியை எதிர்க்கத் திராணியற்றக் கூட்டங்களாக இருப்பதை என்னவென்று சொல்வது எனப் புரியவில்லை..?

ஆக்கக்குறைந்தது ஓர் அறிக்கையானது வெளியிடத்தெரியாத நபர்கள் எவ்வாறு மக்களை நடத்துவார்கள் என நம்புவது? ஆனால், கொரோனா விதிகளையும் மீறி, வருவாய் ஈட்டும் ஆண்டு விழாக்களையும், நிகழ்வுகளையும் நடாத்தத் துணிவு இருக்கிறது என்றால் இவையின்ர நோக்கம் என்ன பாருங்கோ?.

உது சம்பந்தமாக, உந்த அமைப்புகளுக்குக் கீழ்நின்று செயற்படுற ஒரு அய்யாச் சாமியைக் கண்டு காரணம் கேட்டன் பாருங்கோ. அவர் சொன்ன விளக்கத்தில எனக்கு செவ்வாய்க்கிரகம் வெறுங்கண்ணில தெரிஞ்சுது கண்டியளோ!. என்னவெண்டாலாம் பாருங்கோ; இப்ப நாங்கள் எரிக் சொல்கைமிற்கு எதிரா அறிக்கை விட்டாலாம், அமெரிக்காவின்ர கோபத்திற்கு ஆளாக நேரிடுமாம் பாருங்கோ.

பிறகு அது தமிழீழம் அமையுறதைத் தடுத்துப் போடுமாம். இப்ப தமிழீழம் இருக்கிற அறைக்குக் கிட்ட யேர்மன் குழு போட்டுதாம். சந்திச்சுக் கதைச்சு தூக்கிக்கொண்டு வாறதுதான் மிச்சமாம். பிறகு உந்த நேரத்தில தேவையில்லாத அறிக்கையளை விட்டு, ஏன் அநியாயமா பகையாளிகளை உருவாக்கவேணும்? எண்டு தானாம், எங்கட யேர்மன் அண்ணை அறிக்கை விடாமல் இருக்கிறாராம் எண்டு போட்டார் பாருங்கோ ஒரு போடு!.

ஓமோம்; உவையள் இரசிய அதிபர் புட்டின் வரைக்கும் தொடர்பு வைச்சிருக்கிற அறிவியல் மேலாளர்கள். இவையில அமெரிக்கா கோபப்பட்டு, கத்தரிக்காய் பொரியலுக்கை நஞ்சு வைச்சிடுமாம். "கேக்கிறவன் கேனையன் எண்டா, அமெரிக்காவின் தலைநகரம் அத்திப்பட்டி எண்டுவாங்களாம்". எரிக் சொல்கைம் யாரால எங்களுக்கு எதிராக அனுப்பப்பட்டவன் எண்ட சாதாரண அறிவுகூட இல்லாமல், உப்பிடி ஒரு கதையை அடிச்சுவிடுறான் எண்டால் அவன் எந்தப்பெரிய மேதாவி எண்டு நீங்களே யோசிச்சுப்பாருங்கோ!.

வருடாவருடம் ஜெனீவாவிற்கு தமிழர்கள் ஒற்றுமையாக அணிதிரண்டு பொங்கி வாருங்கள்.. எண்டு அறிக்கை விடுற இதே அறிவியல் மேலாளர்கள், ஆக்கக்குறைந்தது தங்களுடைய நிலையின் அறியாமைப் பற்றி ஒரு துளியாவது மக்களுக்குத் தெரியப்படுத்த முன் நிற்கினமோ எண்டால் இல்லை கண்டியளோ..! ஆனால், பதினோராம் மாத மாவீரர் நாளுக்குச் சித்திரை மாதமே காசு சேர்க்கிறதுக்குத் துண்டு அடிச்சுக்கொண்டு இறங்கீருவினம் பாருங்கோ!.

மாவீரர்களை வணங்க முதல், அவர்கள் ஏன் களமாடி வீழ்ந்தார்கள்? எண்ட அடிப்படை அறிவோ அல்லது அவர்களை வழிநடத்திய தலைமையின் தீர்க்கதரிசனம் பற்றியோ கொஞ்சமும் அறிவில்லாமல் இயங்கும் இந்தக்கூட்டம், இன்னும் எவ்வளவு காலம் மக்களை ஏமாற்றப்போகிறது? எண்டு நீங்களே சிந்தியுங்கோ!.

உவங்களை எல்லாம் முதலிலத் தனிமைப்படுத்தவேணும் கண்டியளோ..

**"வாரிச்சுருட்டிக்கொள்ள**
**ஆசை இருக்குமென்றால்**
**நேர்மையும் நீதியும் கணக்கேது**
**பாரில் வாழ்ந்துவரும்**
**பாவ மனிதரெல்லாம்**
**நடப்பத்தைச் சொல்லிடப்**
**பயமேது"**

**- அப்ப வரட்டே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம்

## திறக்கும் உண்மைகள்

"உளம் திறக்கும் உண்மைகள்....." என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.









### வரவேற்பு!..

வரவேற்பு அறைகளில் அன்று
குத்துவிளக்கு, சாம்பிராணி, குங்குமம்
சந்தணம் பூக்கள் என வரவேற்கும் - இன்று
ஸ்மாட்போன், அமேசான், எக்கோ, ஹொம் மெசின்கள்!..

### உரித்தா?..

மலருக்குள் இருக்கும் தேன் மலருக்கு உரித்தா
சங்குக்குள் இருக்கும் முத்து சங்குக்கு உரித்தா
நிலத்தினுள் இருக்கும் பவுண் நிலத்துக்கு உரித்தா
பூமியில் வாழும் மனிதன் பூமிக்கு உரித்தா?..

### திணறல்!..

பெற்றோரின் விருப்பம் ஆசைக்காகவும்
எதைப்படித்தால் நிறையச் சம்பளம்
எப்படிக் கௌரவம் பெறலாம் எனவும்
இன்றைய மாணவர்களோ திணறலில்!..

### முதலிடம்!..

உலகின் முதலிடம் அமெரிக்காவுக்காம்
துப்பாக்கிக் கலாச்சாரத்திலும்
சுட்டுப் படுகொலை செய்வதிலும்
கொரோனா உயிரழிவுகளிலும் அமெரிக்க முதலிடம்!..

### யாசகம்!..


பெற்று வளர்த்த ஐந்து செல்வங்களும்
ஐந்து கண்டங்களிலும் உல்லாசம்
மரணத்தை நெருங்கும் பெற்றோர்
ஆதரவற்றோராய் தெருக்களில் யாசகம்!..

**வைரமுத்து-சிவராசா**
ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகர கவிக்களம்....



## மண் வீடு

மனிதனாக பிறப்பது
மகா புன்னியம்
மனித நேயம் இழப்பது
மகா பாவம்.
கல்வீடு காலத்தின் தாக்கம்
கனவு கானாதே நித்தம்.
மண் வீடு தான்
உனக்கு நிரந்தரம்
அதுவும் ஆறடி
மண்வீடு என்பதை
மறந்து விடாதே
இதை தினம்.

**கெங்கா ஸ்டான்லி**

### அழிவே துணை

தன்னிடமிருந்து திருடப்படும்
எல்லாப் பொருட்களுக்கும்
கணக்கு வைத்துப் பழிதீர்க்கும்
கடவுள்தான் இயற்கை.

### பிச்சை

பிச்சையிடுவதால் பாவம் குறைவதில்லை,
பிச்சையேந்தும் அளவிற்கு
அவனை ஆக்கிய பாவமும் எமக்குண்டு

### கனவு

கனவுகளைத் தூர எறிந்துவிட்டு
நடக்கச்சொல்கிறார்கள்,
வந்து தொலையும் தூக்கத்தை
தொலைக்கமுடியுமா என்ன?



### தொற்று

தொற்றுநோய் வந்தபின்பு
தொற்றாதிருக்க வேண்டுகிறோம்,
இவ்வுலகில்
பற்று வைத்திருக்கும் வரை
தொற்றும் இருக்கும்.

### ஆள்வது யார்?

அரசாட்சி எங்கே இருக்கிறது..
அரசும் இல்லை
ஆட்சியும் இல்லை,
பணம் ஆளும் உலகமிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண் தவராசா



# சிங்களமே! தமிழர்களை மேலும் ஒடுக்கு!

ஒரு பிரச்சனையில் இருந்து எதிரிகளின் கவனத்தைத் திசைதிருப்ப வேண்டுமாயின், வேறொரு பிரச்சனையை உருவாக்கி விடுவது, மக்கள்விரோத ஆட்சியாளர்களின் உத்திகளுள் ஒன்று. விடுதலைப் புலிகளின் தலைவர்களுள் ஒருவரான திலீபனின் நினைவை அனுட்டிப்பதற்குச் சிங்களம் விதித்த தடைகளைப் பார்த்தால், மற்றொரு களத்தைத் திறந்து எதிரிகளின் கவனத்தை மடைமாற்றிவிட எடுக்கப்பட்ட முயற்சியோ? என எண்ணத் தோன்றுகின்றது.

பொதுத் தேர்தல் தந்துவிட்ட அதிர்ச்சியில் இருந்து தமிழ் மக்களும், அரசியல் கட்சிகளும் மீள்வதற்கு முன்னரேயேப் பல்வேறு களங்களைத் திறந்து வைத்துக் கொண்டுக் காத்து நிற்கிறது சிங்கள இனவாதம். அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு - ராஜபக்ச குடும்பத்தினரின் சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்தும் நோக்கிலான - 20ஆவது திருத்தச் சட்ட விவகாரமாக இருக்கட்டும், ஈழத் தமிழ் மக்களின் 30 வருட கால ஆயுதப் போராட்டத்தின் ஒரேயொரு அறுவடை எனக் கருதக்கூடிய மாகாணசபை முறையை இல்லாதொழிக்கும் எண்ணத்துடன், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீக்கிவிடும் எண்ணம் உள்ளதாக முன்மொழியப்படும் விடயங்களாகட்டும், கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள்

> **திலீபன் நினைவேந்தலுக்குத் தடைவிதிக்கப்பட்ட விடயத்தில் விளைந்த மிகமுக்கிய நன்மையாகத் தமிழ்க் கட்சிகளிடையே உருவாகியுள்ள ஒருமித்த செயற்பாட்டுத் தளத்தைக் குறிப்பிடலாம். கருத்து வேறுபாடுகள்(?) இருந்தாலும் பொதுப் பிரச்சனையில் ஒருமித்துச் செயற்பட முடியும் என்ற வரலாற்று உண்மை மீண்டும் ஒருதடவை நிரூபிக்கப்பட்டுள்ளது**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களைக் கண்டறியும் நோக்கில் நியமிக்கப்பட்டுள்ள செயலணியில் தனித்துச் சிங்கள இனத்தவரையும், பௌத்த பிக்குகளையும் மாத்திரம் நியமித்துள்ளதாகட்டும், பல்வேறு வேண்டுகோள்கள் விடப்பட்டுள்ள போதிலும், இந்தச் செயலணியில் ஒரு தமிழரையோ, முஸ்லிமையோ சேர்த்துக் கொள்வதில் தயக்கம் காட்டுவதிலாகட்டும், சிங்கள இனவாதம் பாதுகாப்பான களத்தைத் தெரிவுசெய்து கொண்டு, ஆட்டத்தில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

தேர்தல் தோல்வி, கட்சிக்கு உள்ளே நடைபெறும் அதிகாரப் போட்டி, பதவிச் சண்டை எனப் பல்வேறு விடயங்கள் கவனத்துக்கு உரியவையாக இருக்கையில், அது தொடர்பில் கவனம் செலுத்துவதா? அன்றில் அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தல்களில் - தோல்வியில் இருந்து மீண்டுவந்து, வெற்றியைப் பெறுவதற்கான வியூகம் அமைப்பதில் கவனம் செலுத்துவதா? எனத் தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முன்னரை விடவும் குறைவான எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைவசம் வைத்துக் கொண்டு அல்லாடுவதை அவதானிக்க முடிகின்றது.

கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரனைக் குறிவைத்து நடக்கும் தாக்குதல்கள், அவரைக் கட்சியின் பேச்சாளர் பதவியில் இருந்து இறக்கியே ஆகுவது எனக் கங்கணம் கட்டிக்கொண்டுக் கட்சிக்கு உள்ளும், புறமும் நடக்கும் சம்பவங்களும், அத்தகைய முயற்சிகளை இலகுவாகத் தட்டிக் கழித்துவிட்டு, தனது வழக்கமான பாதையில் நடைபோடும் சுமந்திரனின் செயற்பாடுகளும், அரசியல் களத்தைச் சுவாரசியமாக வைத்திருந்தாலும் கூட, எதிர்காலம் தொடர்பான அச்சத்தை மெதுவாகத் தோற்றுவிக்காமலும் இல்லை. சுமந்திரனின் ஆற்றல் தமிழ் மக்களுக்குப் பயன்தராது போனாலும் பரவாயில்லை, எமது நோக்கம் நிறைவேறினால் போதும்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற விதத்தில் காய்நகர்த்தும் சில முதிர்ந்த(?) அரசியல்வாதிகள், தம் தலையில் தாமே மண்ணை வாரிக் கொட்டுகிறார்களோ? என நினைக்கத் தோன்றுகின்றது.

திலீபன் நினைவேந்தல் விடயத்திலேயே இது ஓரளவு புலப்படக் கூடியதாக இருந்தது. நினைவேந்தல் தொடர்பான சட்டச் சிக்கல் விடயத்தில் சுமந்திரனின் தலையீட்டை நீக்கம் செய்வதில் வெற்றிகண்ட அரசியல் தலைவர்கள், நினைவேந்தலுக்கான நீதிமன்றத் தடையை வெற்றி கொள்வதில் தோல்வியையே தழுவி இருந்தார்கள். இந்த விடயத்தில் சுமந்திரன் தலையிட்டிருந்தால் சிலவேளை நினைவேந்தலுக்கு நீதிமன்ற அனுமதி கிடைத்திருக்குமோ? எனப் பரவலாக மக்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயமே சுமந்திரனுக்கான அங்கீகாரமாக வெளித் தெரிகின்ற அதேவேளை, சுமந்திரன் இந்த விவகாரத்தில் தலையிடுவதைத் தடுப்பதில் வெற்றி கண்டவர்களின் தோல்வியாகவும் இருக்கிறது.

“நான் பெரிது, நீ பெரிது என்பதை விட, நாடு பெரிது என நினை” என்ற மேற்கோளை இந்த இடத்தில் நினைவுகூரல் பொருத்தமாக இருக்கலாம். கட்சியே செல்வாக்கு இழந்து போயிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இருக்கின்ற ஒரு சிலரையாவது அரவணைத்துச் செல்லாமல் நடைபயில நினைக்கும் போக்கு, தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்பதனை நினைவில் கொள்வது சாலச் சிறந்தது.

திலீபன் நினைவேந்தலுக்குத் தடைவிதிக்கப்பட்ட விடயத்தில் விளைந்த மிகமுக்கிய நன்மையாகத் தமிழ்க் கட்சிகளிடையே உருவாகியுள்ள ஒருமித்த செயற்பாட்டுத் தளத்தைக் குறிப்பிடலாம். கருத்து வேறுபாடுகள்(?) இருந்தாலும் பொதுப் பிரச்சனையில் ஒருமித்துச் செயற்பட முடியும் என்ற வரலாற்று உண்மை மீண்டும் ஒருதடவை நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த ஒருமித்த செயற்பாடே - தேர்தலுக்குப் பின்னான




THOOYA COMMUNICATION




Rheinische Str 80
44137 Dortmund




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சூழலில் - ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பெரு விருப்பாக இருந்தது. ஆனால், குறுகியச் சிந்தனைகளை முதன்மைப் படுத்தும் கட்சிகள், அதனை அலட்சியம் செய்யும் வகையிலேயே நடந்து கொண்டன. எனினும், திலீபன் நினைவேந்தல் விவகாரத்தின் பின்னான சூழலில் - குறுகிய காலத்திற்கேனும் - இந்த ஒருமைப்பாடு நீடிக்குமா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

ஈழத் தமிழர் அரசியலில் மிகப்பாரிய முரண் நகையாக எழுகின்ற விடயம், தமிழ் மக்களிடையேயோன ஒற்றுமையைத் தீர்மானிப்பவர்களாக எதிரிகளே இருந்து வந்திருக்கின்றார்கள் என்பதே!. 1970களில் இதுவே நிகழ்ந்தது. இந்தியப் படைகள் தமிழர் தாயகத்தில் நிலைகொண்டிருந்த காலத்திலும், அதன் பின்னர் தமிழர் அரசியலில் விடுதலைப் புலிகளின் கரங்கள் ஓங்கிய போதிலும், இதுவே நடந்தது. தற்போதும் இதுவே நடந்திருக்கின்றது.

இதிலிருந்து புரிந்து கொள்ளக் கூடிய விடயம் என்னவெனில்? தமிழ் மக்கள் மத்தியிலே ஒற்றுமை தேவையானால் அவர்களுக்கு எதிரான மிகப்பாரிய அச்சுறுத்தல் முன்நிபந்தனையாகின்றது என்பதே!.

“யூதர்களுக்கு நிகரான அறிவாளிகள் தாம்” எனத் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்ளும் ஈழத் தமிழர்கள், ஒற்றுமை என வரும்போது மாத்திரம் யூதர்களிடம் இருந்து 180 பாகையில் வேறுபடுவதே யதார்த்தமாக உள்ளது. இந்த நிலையில் மாற்றம் வருவதற்கான அறிகுறிகள் எதனையும் தற்போதைய நிலையில் காண முடியவில்லை. எனவே, தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுமாறு கோருவதை விட, சிங்கள இனவாதத்திடம் ‘தமிழ் மக்களுக்கு மேலும்மேலும் அழுத்தங்களைக் கொடுங்கள் என்று மண்டியிட்டுக் கேட்பதால் அதிகபயன் விளையுமோ? எனச் சிந்திக்கத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவதானி

பகுதி.31

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

ஓர் நாட்டுக்குள் உளவு நிறுவனங்கள், அந்த நாட்டை ஆட்டம் காண வைப்பதற்காகப் பலவிதமான நாசகார வேலைகளைச் செய்கின்றன.

தமது நாட்டுக்கு எதிராக, அந்நாட்டின் கட்டமைப்பின் இரகசியங்களை பணம், பெண், பொருளுக்கு ஆசைப்பட்டு வல்லரசு நாடுகளுக்கு கொடுப்பவர்கள் உண்டு.

அதே வேளை தாம் தமது நாட்டுக்கு எதிராக உளவுப் பார்த்துச் சதி செய்கிறோம் என்பதை உணராமலே இரகசியங்களைச் சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

யதார்த்தமாகப் பேசுகிறோம், சொல்கிறோம் என நினைத்துக் கொண்டு



இரகசியங்களைச் சொல்வோரிடமிருந்து இறாலைப் போட்டுச் சுறாவைப் பிடிக்கும் தந்திரத்தை உளவு நிறுவன ஒற்றர்கள் கையாளுகிறார்கள்.

இக்கட்டுரைத் தொடரின் ஆரம்பத்திலேயே வளங்களில் அத்தியாவசியமான வளம் ஆரோக்கியமான மனித வளமேயாகும் என்பது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது

ஒரு நாட்டில் எத்தனை; செழிப்பான மனிதகுலத்திற்கு அத்தியாவசியமான வளங்களிருந்தாலும், அவற்றிலிருந்து பெறும் பலன்களால் மக்களின் வாழ்வு செழிப்புற்றாலும்கூட அந்த நாட்டு மக்கள் நோய்யற்ற, ஆரோக்கியமான மக்களாக இருந்தால் மட்டுமே அந்த நாடு செழிப்பான நாடாகும்.

இன்றைய நாளுக்கான கணிணியுக, அதிநவீன தொழில்நுட்பமுள்ள நாடாக ஒரு நாடு இருக்குமாயினும்கூட, அந்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுற்ற மக்களை அதிகமாகக் கொண்ட நாடாக இருந்து, அந்த நாடு நவீன தொழில்நுட்ப நாடாக இருக்குமானால்;, அதன் வளர்ச்சி சறுக்கு மரத்தில் ஏறுவதற்கு ஒப்பானதாகும்.

ஒரு நாட்டைச் சீரழிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளில் மிகவும் மோசமான சதிக் கோட்பாடு என்பது, நோய்க் கிருமிகளை அந்த நாட்டு மக்கள் மீது தொற்றுக் கிருமிகளாகப் பரப்புதல் என்பதேயாகும்.

அதைக் காலம் காலமாக பலநாடுகள் செய்து வருகின்றன. நாடுகளை மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்தில், எல்லா நாடுகளும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாக இருப்பது போலவும், ஒரு நாட்டுக்கு இன்னொரு நாடு உதவி செய்வது போலத் தோன்றினாலும், ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டின் வளர்ச்சியை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தே வருகின்றன.

தனது நாட்டு உற்பத்திகளை அனைத்து நாடுகளுமே கொள்வனவு செய்ய வேண்டுமென்பதற்காக, தமது உற்பத்திப் பொருட்களுக்குச் சமனானப் பொருட்களை, மற்றைய நாடுகள் உற்பத்தி செய்வதைத் தடுக்கும் நோக்குடன் சதிக் கோட்பாட்டுக்கு அமைவான நோய்க் கிருமிகளைப் பரப்புதலை மேற்கொள்ளுகின்றன.

ஒரு கால எல்லையை வகுத்து, திட்டமிட்ட ஆண்டுக்குள் தமது நாடு உலக நாடுகளுக்குள் முதல் நிலை வல்லரசாக இருக்க வேண்டும் என்பதற்;கமையச் செயல்படுகின்றன.

நோய்க்கான நுண்கிருமிகளின் பரப்புதல் என்பது, நோயுற்றவர்களால், உற்பத்தியிழப்பு, முற்றாக உற்பத்தி முடக்கம், உற்பத்திக் குறைவினால் பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், அவ்வுற்பத்தியை அனைவருமே வாங்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத விலையைத் தொழிற்சாலைகளும், சந்தைப்படுத்துவோரும் விலையை நிர்ணயிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றன.

இவ்விலையேற்றம் என்பது தி;ட்டமிட்ட விலையேற்றம் என்பதைப் பொதுமக்கள் மத்தியில் காட்டிக் கொள்ளாமலும், திட்டமிட்ட விலையேற்றந்தான் என்பதை பொதுமக்கள் உணராதிருப்பதற்காக நோய் பரவுதலால் ஏற்படும் பாதிப்பால் இவ்விலையேற்றம் ஏற்பட்டது என்பதை பொது நம்பிக்கைக்கு உட்படுத்துவதேயாகும்.

நோய்க்கான நுண்கிருமிகளை உளவு நிறுவனங்கள் பலவழிகளில் பரப்புகின்றன. தமது நாட்டுக்காக இன்னொரு நாட்டில் தேசவிசுவாசம் என்ற பெயரில் தமது உடலில் நோய் கிருமிகளைச் சுமக்கின்ற நோய் காவிகளாக உளவு நிறுவனங்களைக் கொண்டு நாடுகளில் அதற்கான மக்கள் செயல்படுகிறார்கள்.

இந்நோய்க் காவிகள் தம்முடலில் நோய்க்கான நுண்ணுயிரைச் சுமக்கச் செய்யும் போதே, நோய்க் காவிகளுக்கு அந்நுண்ணுயிர்க் கிருமியால் நோய்ப் பாதிப்பு ஏற்படாத வகையில் அதற்கானத் தடுப்பு மருந்துகள் ஏற்றப்படுகின்றன.

இத்தகு நோய்க் காவிகள் சுற்றுலாப் பயணிகளாகவும், தொழில்சார் ரீதியிலும் எந்த நாட்டின் கட்டமைப்புகளைச் சிதைக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அந்நாடுகளுக்கு உளவு நிறுவனங்கள் அனுப்பி வைக்கின்றன.

நோய்க் காவிகளாக மனிதர்கள் பயன்படுத்தலில் அவர்களின் இயல்பான மூச்சுக்காற்று, தும்மல், இருமல் போன்றவற்றிலிருந்து நோய்க்காவிகளின் உடலில் இருக்கும் நுண்கிருமிகள் மற்றையவர்களுக்குப் பரவி விடுகின்றன.

நோய்க் காவிகள், மக்கள் அதிகமாக நடமாடும் அல்லது பயன்படுத்தப்படும் இடங்களான சந்தைகள், கடைகள், பேருந்துகள், தொடருந்துகள், படமாளிகைகள் போன்றவற்றுக்குச் சென்று அவர்கள் தும்முவதாலோ, இருமுவதாலோ நோய்த்தொற்று கிருமி வேகமாகப் பரவி விடுகின்றது.

நோயை ஏற்படுத்தும் உயிர்க்கொல்லி நுண்கிருமிகளை மனிதர்கள் மட்டுமல்ல, இறைச்சிக்காக வேறு நாடுகளுக்கு இறக்குமதி செய்யப்படும் விலங்குகளின் உடலில் நோய்கிருமிகளை ஆய்வுக்கூடங்களால்கூட உடனடியாக அறிய முடியாத வகையில் செலுத்தி அனுப்பப்படுகின்றன.

இத்திட்டத்தை வகுப்பவர்கள், பல கோடி பணத்தை இலஞ்சமாகவோ அல்லது இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று பெண், பொருள் போன்றவற்றால் இதனைச் சாதிக்கின்றனர்.

இறைச்சிக்கான விலங்குகளை வளர்க்குமிடத்திலேயே, உளவு நிறுவனங்களுக்கு விலை போகக் கூடியவர்களால் இத்திட்டம் நிறைவேற்றப் படுகின்றது.

மனித உடலில் உடனடியாக வேகமாக பரவிப் பாதிப்பை ஏற்படுத்தும் நுண்கிருமிகள், மனித உடலில் பரவி உறங்கு நிலையில் பலநாட்கள் இருந்ததன் பின் பிறகு வேகமெடுத்துப் பரவுதல், நீறுபூத்த நெருப்பைப் போன்று நோயற்றத் தன்மையாக உடலை வைத்திருந்து, பின்னர் மீண்டும் நோயை ஏற்படுத்துதல் என உயிர்க்கொல்லி நுண்கிருமிகளை உளவு நிறுவனங்கள் உற்பத்தி செய்து நாடுகளைச் சீரழித்து வருகின்றன.

இன்று மருந்து உற்பத்தியில், மருந்து உற்பத்தியாளர்கள் போட்டா போட்டி போட்டுக் கொண்டு மருந்துகளை உற்பத்தி செய்கின்றனர். மருந்து உற்பத்தி உலகை ஆளும் பெரும் வணிகமாகி விட்டது. ஒரு நோய்க்கு கொடுக்கப்படும் மருந்துகளால் பல நோய்களை உருவாக்கும் வேதியல் கலப்புகளும், நோய்களை ஏற்படுத்தும் உறங்குநிலை நுண்கிருமிகள் அடங்கிய மருந்துகளை உற்பத்தி செய்து விற்கின்றன.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கர்கள் அதிகமாகப் பங்குசெலுத்திய வியாபாரமான கச்சா எண்ணெய் வியாபாரம், முடக்கத்திற்குள்ளாக வாய்ப்பிருக்கிறது. காரணம் அதன் விலை வீழ்ச்சியின் போக்குப் பாதாளத்திற்கு வந்துவிட்டது. இப்போது விற்கும் எரிபொருள் விலையை விடவும் தாண்டி, இன்னமும் கீழே சென்றுவிடாமல் கட்டுக்குள் வைத்திருக்க, அமெரிக்கா தலைமையிலான எண்ணெய் அமைப்புகள் பெருமளவு நிதியைச் செலவிடுகின்றன. இவ்வாறொரு நிலை தமக்கு ஏற்படுமென டிரம்ப் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்.

கொரோனாத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கையாக உலகளாவிய முடக்கத்திற்கு முன்பே, கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடையத் தொடங்கியது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 60 டொலர் அளவில் விற்கப்பட்ட ஒரு பீப்பாய், மார்ச் மாத இறுதியில் 20 டொலர் அளவில் குறைந்தன.

இதற்குக் காரணம், மிகவும் வெளிப்படையானது. தேவைக்கும் அதிகமாக ஒரு பொருளின் விநியோகம் இருக்கும்போது, அதன் விலை குறையும் என்பது ஊரறிந்த விடயம் தான். அதுதான் தற்போது உலகளாவிய எண்ணெய் சந்தைகளிலும், குறிப்பாக அமெரிக்கா எண்ணெய் சந்தையிலும் நடந்து வருகிறது. அதிகமான கச்சா எண்ணெய் உற்பத்தியால், எண்ணெய் சந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகிறது.

வரலாற்று அளவில் சவுதி அரேபியாவின் (உலகளாவிய தேவையில் 10 சதவீதத்தை ஒற்றையாளாக ஏற்றுமதி செய்கிறது) தலைமையிலான எரிபொருள் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு தமக்கு (போட்டியை அழித்து, விலைகளை ஏற்றி வைப்பது போன்ற நோக்கங்களுக்கான வணிக நிலையங்களின் கூட்டணி) இருந்து சாதகமான விலைகளை நிர்ணயிக்கின்றன. இந்த நாடுகள் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் விலையைக் குறைக்கும், உற்பத்தியைக் குறைப்பதன் மூலம் எண்ணெய் விலையை உயர்த்தும்.

*OPEC* அமைப்பு உலகளாவிய

# Covid - 19

## இரண்டாம் அலை காரணமாக அமெரிக்காவின் எண்ணெய் மீதான ஆதிக்கம் சரிந்து போய்விடுமா?

அறிவழகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் விலைகள் மற்றும் விநியோகத்தைச் சரிசெய்யும் நோக்கில் சமீபகாலமாக இரசியா மற்றும் ஒபெக் நாடுகளுடன் இணைந்துச் செயல்பட்டு வருகின்றது. எண்ணெய் விலையைக் குறைக்கும் நோக்கில் உற்பத்தியைக் குறைப்பது, கச்சா எண்ணெய் கிணற்றை முற்றிலுமாக மூடுவது என்பது மிகவும் கடினமான செயல் என்பதையும் இங்கு புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், உற்பத்தியை மீண்டும் தொடங்குவது மிகவும் சிக்கலானது, பொருளாதார அளவில் சவாலானது. மேலும், உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்ற ஒரு நாட்டின் முடிவை மற்றவர்களும் பின்பற்றாவிட்டால், உலகளாவிய எண்ணெய் சந்தைகளில் அந்த நாடு தனது ஆதிக்கத்தை இழக்க நேரிடும்.

கடந்த மார்ச் மாதத் தொடக்கத்தில் கச்சா எண்ணெய் விலையைச் சீரான முறையில் நிர்ணயிக்கத் தேவைப்படும் உற்பத்தி குறைப்பு ஒப்பந்தத்திற்கு, சவுதி அரேபியாவும், இரசியாவும் உடன்படாததால், எண்ணெய் உற்பத்தி நாடுகளின் பழைய மகிழ்ச்சியானத் தருணம் முடிவுக்கு வந்தது. இதன் விளைவாக சவூதி அரேபியா தலைமையிலான எண்ணெய் ஏற்றுமதி நாடுகள், எண்ணெய் உற்பத்தியில் கைவைக்காமல், ஒருவருக்கொருவர் விலையைக் குறைத்துப் போட்டிப் போட ஆரம்பித்தனர்.

சாதாரண காலங்களில் கூட இந்த விலை குறைப்பு நடவடிக்கை நிலையானதாக இருக்க முடியாது. ஆனால், கொரோனா வைரசு பெருந்தொற்று, இந்த நடவடிக்கையை பேரழிவுக்கு வித்திட்டது. கடந்து செல்லும் ஒவ்வொரு நாளிலும், வளர்ந்த நாடுகள் கோவிட் -19 தொற்றுக்கு இரையாகின. உலகம் பொது முடக்க நிலைக்கு செல்லப்பட்டதால், விமானங்கள் குறைந்தன, சாலைகளில் குறைவான ஊர்திகள் பயன்படுத்தப்பட்டன.

கோவிட் -19 தாக்கத்தால் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் அழுத்தத்தால் சவுதி அரேபியாவும், இரசியாவும் தங்களுக்குள்ளானக் கருத்து வேறுபாடுகளை மறந்து, கச்சா எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் கடந்த வாரம் கையெழுத்திட்டனர். உண்மையில், இது மிகவும் தாமதமாக வந்த முடிவு என்றே சொல்ல வேண்டும்.

எண்ணெய் ஏற்றுமதி நாடுகள், நாளொன்றுக்கு எண்ணெய் உற்பத்தியை 6 மில்லியன் பீப்பாய்கள் குறைக்க முடிவு

புத்தகம் வெளியிட வேண்டுமா..?




பத்திரிகைப் பணியில் இருபத்து மூன்று ஆண்டுகளாகப் பல சாதனைகளை நிகழ்த்தி வரும் இனிய நந்தவனத்தின் அடுத்த முயற்சியாக இனிய நந்தவனம் பதிப்பகம் மூலம் பல நல்ல நூல்களையும் பதிப்பித்து வருகின்றோம். எங்களின் இந்த முயற்சிக்கு வாசகர்கள் மற்றும் எழுத்தாளர்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வரவேற்கிறோம்.
தங்களின் கதை, கவிதை, கட்டுரை, சிறுகதைகளை உலகத்தரத்தில் ISBN எண்களோடு புத்தகமாக உருவாக்கித் தருகிறோம். புத்தக வெளியீட்டு விழா மற்றும் அனைத்துப் பரிசுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான வழிகாட்டுதலையும் செய்து தருகிறோம்.

எழுத்துப் பிரம்மாக்களே!

தொடர்பு கொள்ளுங்கள்

இனிய நந்தவனம் பதிப்பகம்

மின்னஞ்சல் : nandavanam10@gmail.com
இணையதளம் : www.nandavanam.com



மேலதீக விபரங்களுக்கு : +91 94432 84823


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருந்தாலும், (வரலாற்றில், மிக உயர்ந்த உற்பத்தி குறைப்பு நடவடிக்கை) கொரோனாத் தொற்று பொது முடக்கத்தால், எண்ணெயின் தேவை நாளொன்றுக்கு 9முதல் 10மில்லியன் பீப்பாய்கள் வரை குறைந்து வருகிறது. மார்ச்-ஏப்ரல் மாதங்களில், விநியோகம்-தேவை இரண்டிற்குமான இடைவெளித் தொடர்ந்து மோசமடைந்தது. அதன் உச்சமாக, கச்சா எண்ணெயைக் கொண்டு செல்வதற்காகப் பயன்படும் தொடருந்துகளும், கப்பல்களும் கச்சா எண்ணெயைச் சேமிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

2018ஆம் ஆண்டில் அமெரிக்கா மிகப்பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தியாளராக மாறியது என்பதைப் புரிந்துகொள்வதும் இங்கு முக்கியமானது. கச்சா எண்ணெயைக் குறைக்க வேண்டும் என்று முந்தைய அமெரிக்க அதிபர்கள் கூறி வந்ததை போலல்லாமல், டொனால்ட் டிரம்ப் (குறிப்பாக தேர்தல் நேரத்தில்) கச்சா எண்ணெயின் விலை உயர்வுக்கு அதிக அழுத்தம் கொடுத்து வருகிறார்.

***US west Texas*** இடைநிலையின் மே மாத ஒப்பந்தங்கள் ஏப்ரல் 21ம் தேதியில் இருந்து காலாவதியாகின்றன. காலக்கெடு நெருங்கியதால், விலைகள் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. இதற்கு இரண்டு பரந்த காரணங்கள் இருக்கலாம். பல உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியை மூடுவதற்குப் பதிலாக, நம்பமுடியாத குறைந்த விலையில் தங்கள் கச்சா எண்ணெய்கள் விற்க ஆரம்பித்தனர்.

நுகர்வோர் (ஒப்பந்தங்களை வைத்திருப்பவர்கள்) தரப்பினருக்கும், இது ஒரு பெரிய தலைவலியாக இருந்தது. சேமிக்க இடமில்லாத காரணத்தால் அவர்களும் அதிக எண்ணெயை வாங்க வேண்டியக் கட்டாயத்தில் இருந்து வெளியேற விரும்பினர்.

எனவே, அதிகப்படியான கச்சா எண்ணெய் கையிருப்பில் இருந்து விலக வேண்டும் என்ற விரக்தி நுகர்வோருக்கும், விற்பனையாளருக்கும் இடையில் இருந்ததால், **Newyork** பங்குப் பரிவர்த்தனைச் சந்தையில் கச்சா எண்ணையின் விலை பூஜ்யமாக வீழ்ச்சியடைந்தது மட்டுமல்லாமல், பூஜ்யத்திற்கும் பகுதிக்கும் சென்றது.

சுருங்கச் சொன்னால், எண்ணெயை சேமிப்பதற்கும், (விநியோக ஒப்பந்தம் வைத்திருப்பவர்கள்) உற்பத்தியை நிறுத்துவதற்கும் (உற்பத்தியாளர்கள்) பதிலாக, ஒரு பீப்பாய்க்கும் 40 டொலர் செலவு செய்து, அதை அகற்றுவது கடந்த மாதச் சூழலில் இலாபகரமாக இருந்தது.

எண்ணெய் விலை எதிர்காலத்தில் எப்படி இருக்குமென்பது தெரியாது?. சந்தைகளில் காணப்பட்ட நிலவரத்தை தான் நாம் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிறோம். மற்ற இடங்களில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்திருந்தாலும், இந்த அளவிற்கு இல்லை. மேலும், அமெரிக்காவில் யூன் மாதத்திற்கான எண்ணெய் விலை பீப்பாய்க்கு 20 டொலராக உள்ளது. இது ஒரு முறை நடக்கும் நிகழ்வாகக் கூட இருந்திருக்கலாம். எண்ணெய் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தியை மேலும் குறைக்கக் கட்டாயப்படுத்தப் பட்டிருப்பதால், இந்த நிகழ்வு மேலும் நிகழாது.

எவ்வாறாயினும், இது போன்ற ஒரு நிகழ்வு மீண்டும் நடக்க வாய்ப்பில்லை என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. ஏனெனில், கோவிட் -19 பெருந்தொற்றாக இருப்பதால், ஒவ்வொரு நாளும் கச்சா எண்ணையின் தேவை குறைந்து வருகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் கொடுங்கோலன் யார்?



உலகின் மிகக்கொடிய தலைவர் என்று நீங்கள் யாரைக் கூறுவீர்கள்? என உங்களிடம் கேட்டால் கண்ணை மூடிக் கொண்டு 'கிட்லர்' என்று தான் பதில் கூறுவீர்கள். கொடுங் கோலனின் பட்டியலில் இதுவரை உங்கள் மனதில் குறித்து வைத்திருந்த வரிசையை அழித்து விடுங்கள். ஆளுமைகளின் பட்டியலில் இவர் பெயரை வைத்திருந்தால் அதையும் துடைத்து தூக்கி எறியுங்கள். ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்த காரணத்தையும், காரியத்தையும் நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் கைக் கொண்டது இரண்டு உத்திகள்.

ஒன்று அன்பகம் போன்ற நஞ்சகம், மற்றொன்று கஞ்சமில்லா வஞ்சகம். மறுமொழியாக, கையிலே வேதப் புத்தகம், மெய்யிலே வர்த்தகம், மொத்தத்தில் தன்னலம். தென்னிந்தியர்களிடம் வேதப் புத்தகம் நன்றாக வேலை செய்தது. வட இந்தியர்களிடம் நரித்தனம் நன்றாக வேலை செய்தது. ஒரு குலத்தை, ஒரு இனத்தை, ஒருசமூகத்தை அழிக்க அதன் வேருக்குவிசம் வைக்க அவர்கள் ஒருபோதும் தயங்கிய தில்லை.

அன்னசத்திரங்கள் ஆயிரம் கண்ட அகண்ட பாரதத்தில் ஆங்கில ஆட்சிக்கு முந்தைய 2000 ஆயிரம் வருட சரித்திரத்தில் பெரும் பஞ்சங்கள் அதிகம் அறியப்பட்டது இல்லை. சொல்லப்போனால் இல்லை என்றே துணிந்து கூறிவிடலாம். ஆங்காங்கே சில நடந்திருந்தாலும், உயிர்பலி அதிகம் கண்டதில்லை. சரி என்ன நடந்தது? யார் அந்தக் கொடுங்கோலன்?

ஐரோப்(பாவின்)பியர்களின் அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தோமானால் இரண்டு விடயங்கள் அங்கே பிரதானமாக இருக்கும் ஒன்று ஆக்கிரமிப்பு, மற்றொன்று இன அழிப்பு. கிட்லர் மட்டுமே கொடுங்கோலராய் கட்டமைத்த ஒரு சார்பு வரலாற்று ஊடகங்கள் மற்றவர்களை மறைத்து விட்டதன் மர்மம் தெரியவில்லை. கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஆப்பிரிக்கா, சிம்பாவே இன்னும் பல நாடுகளின் பூர்வ குடிகளை அம்மண்ணின் மைந்தர்களை, குரல்வளையை நெருக்கி மண்ணை அபகரிக்கப் போட்டிப் போட்டு மனித உயிர்களைக் காவு கொடுத்த அத்தனை ஐரோப்பிய நாடுகளையும் வரலாறு அறியும். ஆனால், கொடுங்கோலன் என்றால் நமக்கு இவர்கள் நினைவிற்கு வராத அளவிற்கு அடித்தள வேலைகள் நடந்திருக்கிறது. கிட்லரின் யூத வெறுப்பு 60 லட்சம் யூதர்களை 12 வருடத்தில் கொன்றழித்தது. இந்தக் கொலைகாரரோ அதே அளவு இந்தியர்களை ஒரே வருடத்தில் இன அழிப்புச் செய்தார்.

இந்தியர்கள் வலிமையானவர்களாகப் பிறக்கக் கூடாது, பிறந்தாலும் இருக்கக் கூடாது குறிப்பாக யேர்மனியுடன் சேர்ந்து பிரித்தானியர்களுக்கு எதிராகச் சேனை அமைத்த சுபாசு சந்திரபோசு பிறந்த வங்காளத்தில் வலிமையானவர்கள் பிறக்கவே கூடாது. அவர்கள் வயிற்றிலே அடியுங்கள், சோற்றுக்குத் திண்டாட விடுங்கள், நாதியற்று, வீதியிலே வீழ்ந்து மடியட்டும் எனத் திட்டமிட்டு வேலை செய்தனர். நம் மக்கள் அவர்களது திட்டத்தின் எதிர்பார்ப்புப் போலவே வீழ்ந்தனர். ஆம்! செத்து மடிந்தனர்.

கொத்துக் கொத்தாக, குடும்பம் குடும்பமாக, விட்டில் பூச்சிகள் போல் மனிதர்கள் செத்து வீழ்ந்தார்கள். "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் -வெறும் சோற்றுக்கோ வந்ததிந்த பஞ்சம்?" வில்லன் யார் என்றா கேட்கிறீர்கள், இன்னுமா தெரியவில்லை..? மறைத்து வைக்கப்பட்ட பேய் முகத்தை மனதினில் கொண்டவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகாய் சரித்திரத்தை அழித்து புனைந்து பட்ட அழகினை வலிந்து பெற்றவன்., "வின்ஸ்டன் சர்ச்சில்" அதிர்ச்சியாய் இருக்கிறதா? காரணம் வேண்டுமா?

1943-44 ன் வங்காளத்தில் நிலவிய பஞ்சம் 20ஆம் நூற்றாண்டில் ஆசியா துணைக் கண்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய பேரழிவு. ஆமாம்! திட்டமிட்டு வேண்டுமென்றே பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்படுத்திய ஒரு இனப் படுகொலை. அதற்கு முழு ஆதரவு தந்தவர் வின்ஸ்டன் சர்ச்சில். 1942-ல் இன்றைய வங்காளம், பீகார், ஒடிசாவில் பருவமழை வழக்கத்தைவிட அதிகம் விளைச்சல் அதிகம். வெள்ளாமை வீடு வந்தால் ஏது பஞ்சம்? வங்காளப் பஞ்சம் (1942-43) சர்ச்சிலின் கொள்கைகளால் ஏற்பட்டதே தவிர, வறட்சியால் ஏற்பட்டதல்ல.

பாரதம் இதுவரை சந்தித்த ஆறு பெரும் பஞ்சங்களில் ஐந்து பஞ்சங்கள் வறட்சியால் ஏற்பட்டவை என்று வரலாறு நமக்கு சொல்கிறது. அந்த வறட்சியும் இந்த அயோக்கியக் கூட்டத்தால் செயற்கையாக ஏற்படுத்தப்பட்டது என்று இன்று நம்மாள் அறிய முடிகின்றது. 1943-ம் ஆண்டின் பஞ்சம் வறட்சியால் ஏற்பட்டதல்ல. அது சர்ச்சிலின் இன வெறுப்பினால் ஏற்படுத்தப் பட்டது. செயற்கைப் பஞ்சம்! **(MAN MADE FAMINE)** வங்காளத்தில் நடந்ததை நாம் திட்டமிட்ட ஒரு இனப்படுகொலை என்றுசந்தேகமே இல்லாமல் கூறலாம். அதுதான் உண்மை.

வின்ஸ்டன் சர்ச்சில் இந்தியர்களின் மீதுகொண்ட அளப்பரிய வெறுப்பினால், இந்தியாவில் அதுவும் அன்றைய வங்காளத்தில் விளைந்த தானியங்களை ஐரோப்பாவிற்குக் குறிப்பாக இங்கிலாந்திற்கு திருப்பி விட்டார். இங்கே இருந்த அதிகாரிகள் எவ்வளவோ கெஞ்சியும் சேர்ச்சில் இந்தியாவிற்கு திரும்ப அனுப்ப மறுத்து விட்டார்.

அதற்கு அவர் சொன்ன விளக்கம் என்ன தெரியுமா..? "நான் இந்தியர்களை வெறுக்கிறேன். மிருகத்தனமான மதம் கொண்ட மிருகத்தனமான மக்கள் அவர்கள், எலிகளைப் போலவும் பன்றிகளை போலவும் பல குட்டிகளை ஈனும் கேடு கெட்டப் பிறவிகள்" என்று கொஞ்சம் கூட கூசாமல் கேவலமாக பதிலளித்தார். "இந்தியாவில் இருந்த பிரித்தானியப் பிரதிநிதிகள் இந்திய உணவு தானியங்கள் ஐரோப்பாவிற்கு திசை திருப்புவதை நிறுத்த மன்றாடினர். இல்லை என்றால் அவுசுத்திரேலியாவில் இருந்து கோதுமையை இந்தியா வழங்குமாறு கேட்டனர். அதற்கு சேர்ச்சில் அளித்த பதில் இதுதான். இந்தியாவில் பஞ்சம் என்றால், "காந்தி இன்னும் உயிருடன் தானே இருக்கிறார்" என்பதாகும். இந்த அதீத காழ்ப்புணர்ச்சிப் பதிலை, வரலாற்று ஆசிரியர்கள் மிகவும் துயரத்தோடு பதிவிடுகின்றனர். இந்த வங்காளப் பஞ்சம் காவு வரலாறு அறிவோம்.

இந்த வங்காளப் பஞ்சம் 60 இலட்சம் மக்களைக் காவு வாங்கியது .60 லட்சம் யூதர்கள் கொல்லப்பட 12 ஆண்டுகள் கிட்லருக்குத் தேவைப்பட்டது. ஆனால் பிரித்தானிய அரசு 1943-1944ஆண்டில் மட்டும் இந்தியர்களை பசியால் வாடவிட்டு இக்கொலைகளை அரங்கேற்றியது. ஏகாதிபத்திய சுரண்டலை குற்றவுணர்வின்றி செய்து முடித்து அறுபது இலட்சம் மனித உயிர்களையும் பலி வாங்கிய கொலையாளியை இரண்டாம் உலகப் போரின் நாயகன் என்று வெட்கமில்லாமல் இந்தியர்கள் பாடப் புத்தகத்தில் படிக்கிறோம். நாம் இன்றைய மேற்கத்திய மக்களையோ இல்லை வெளி நாட்டவரையோ வெறுக்க வேண்டிய அவசியம் இல்லை. நமக்கு ஒரு பாடம் கற்றுக் கொள்வது தான் வரலாறு. உண்மையான வரலாற்றினை!.

வரலாற்றுச் சம்பவங்களை பாடங்களாக கற்றுக் கொள்வதன் மூலம் கல்வி கற்கும் முறையில் மாற்றத்தின் மூலமும், எதிர்காலச் சந்ததிகளாவது, காந்தி தான் இந்தியாவிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார், வீரபாண்டிய கட்ட பொம்மன் ஒரு சுதந்திர போராட்ட வீரர். தமிழர் தலைவர் பெரியார், தமிழினத் தலைவர் கருணாநிதி என்று இன்னும் இவ்வாறான பல போலித்தனான புனைவு வரலாறுகளை நம்பி நம்மை போல் ஏமாறாமல்,

***எப்பொருள் யார் யார்வாய் கேட்பினும்***
***அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு***

எனும் வள்ளுவர் வாக்கின் படி நம் பிள்ளைகளாவது உண்மையின் பக்கம் துணை நிற்கட்டும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Swiss Life
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்

**Sägestrasse 79**
**3098 Köniz**
**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

Cicero Member ID 15787
www.cicero.ch

So fängt Zukunft an.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை தெய்வம்

# ஓடிப்போனவள்!

சிறுகதை

தூறல் மழை வீட்டுக் கூரையில் விழுகின்ற சத்தம் இரவின் அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது! மழைக்குளிர் உடம்பையும் குளிர வைத்தது. வழமைக்கு மாறாக அந்த நடுச்சாம வேளையில் சிறுநீர் கழிக்க வேண்டியிருந்ததால் கழிவறைக்குப் போகலாம் என்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள் கிரிஜா! அருகில் படுத்திருந்த அம்மாவைக் காணவில்லை! ஒருவேளை அம்மாவிற்கும் கழிவறைக்குப் போக வேண்டியத் தேவை வந்திருக்கலாம் எனச் சிந்தித்தபடியே சிறிது நேரம் படுக்கையிலேயே காத்திருந்தாள்.

நிமிடங்கள் கடந்ததே தவிர, அம்மா வரவில்லை. சரி பார்க்கலாம் என எழுந்துக் கதவைத் திறந்து, பின்வாசல் வழியாக கழிவறையை நோக்கிச் சென்றபோது, வீட்டின் பின்புறமுள்ள மாட்டுக் கொட்டகைப் பக்கமிருந்து அம்மா யாருடனோ கதைக்கின்றக் குரல் கேட்டது! அப்பாவும் வீட்டில் இல்லை! அவர் நேற்றுத்தான் தனது மரக்காலைக்குக் காட்டு மரங்கள் பெறுவதற்கான அனுமதியைப் பெறுவதற்காகக் கொழும்பு போயிருந்தார். வர இரண்டு நாட்களாகும் என்று சொல்லி விட்டுத்தான் சென்றார். அப்படியிருக்க இங்கு அம்மா இந்த இரவு நேரத்தில் இரகசியமாக யாருடன் கதைத்துக் கொண்டிருக்கின்றாள்?

தாய் யாருடன் கதைத்துக் கொண்டிருக்கின்றாள் என்பதை அறிவதை விட, சிறுநீர் கழிக்கவேண்டியத் தேவை மிக மிக அவசரமாக இருந்ததால், கழிவறைக்குச் சென்று அவசரமவசரமாகத் தன் வேலையை முடித்துவிட்டு, நிதானமாக மாட்டுக் கொட்டகை நோக்கி நடந்தாள் கிரிஜா. இப்பொழுது அம்மாவின் குரல் தெளிவாகக் கேட்டது.

"எங்களையெல்லாம் வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டுத்தானே அந்தச் சிங்களவனோடை ஓடிப்போன நீ! இப்ப எந்தத் துணிவிலை திரும்பி வந்து நிக்கிறாய்? பின் வாசல்; கதவு வழியா போனவ, பின் வாசல் கதவு வழியா வந்தா, வீட்டுக்குள்ளை விட்டுடுவோம் எண்டு நினைச்சியா? நீ செத்ததென்று நினைச்சு உனக்குச் செய்ய வேண்டிய கடைசிக் காரியமெல்லாம் செய்திட்டம்!" அம்மா மூச்சு விடாமல் கோபமாக பேசிக்கொண்டிருந்தாள்!

இரண்டு வருசத்திற்கு முன் ஓடிப்போன தனது அக்காவைத்தான் அம்மா திட்டிக் கொண்டிருக்கின்றாள் என்பது புரிந்தது. அப்படியானால் அக்கா திரும்ப வந்திருக்கின்றாளா?

2009ல் முள்ளி வாய்க்காலில் நடந்த இறுதி யுத்தத்திற்குப் பின்னர், தமிழர்கள் வாழ்கின்ற நிலங்களெல்லாம் சிங்கள இராணுவ மயமாக்கப்பட்டுச் சந்திக்குச் சந்திச் சிங்களப் படைகள் நிறுத்தப்பட்டு, ஒவ்வொரு தமிழர்களும் கண்காணிக்கப்பட்டு வந்த காலம் அது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாண மாநகர சபையின் ஒரு எல்லை. அதைத் தாண்டினால் வருவது கொக்குவிலின் ஆரம்ப எல்லை... காங்கேசன்துறை வீதியில் கொக்குவிலுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் எல்லையாக இருக்கும் இடம் பூநரி மரத்தடி. அதன் இடதுபக்கம் திரும்பிச் செல்லும் வீதியில்தான் மரக்காலை மணியத்தாரின் வீடு. மணியம், நாகம்மா தம்பதிகளுக்கு வயதுக்கு வந்த இரண்டு பெண் பிள்ளைகள். முத்தவள் வனஜா, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பொறியியல் படித்துக் கொண்டிருக்கின்றாள். இரண்டாமவள் கிரிஜா, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கின்றாள்.

போர் முடிவுக்கு வந்ததும், யாழ்ப்பாணத்தில் யாரும் குடியில்லாத வீடுகளையெல்லாம் இராணுவம் தங்கள் முகாங்களாக மாற்றிக்கொண்டு வந்தன. மணியத்ததாரின் வீட்டுக்குப் பக்கத்து வீடும் ராணுவ முகாமாக மாறியது. பெண் பிள்ளைகளோடு அங்கு வாழ மணியத்தார் குடும்பம் பயந்தாலும், ஒரு வாரம்தான் அந்தப் பயம் நீடித்தது. காரணம் காவலுக்கு நின்ற இராணுவ வீரர்கள் அயலில் உள்ள மக்களுடன் நண்பர்களைப் போலவே பழக ஆரம்பித்து விட்டார்கள்!

ஒரு வாரமாக வீட்டைவிட்டு வெளியே வராத வனஜா, கிரிஜா இருவரும் இப்பொழுது வழமை போலப் பாடசாலைக்குச் சென்றுவர ஆரம்பித்து விட்டார்கள். இவர்களைக் கண்டால் அங்கு காவலுக்கு நிற்கும் ராணுவத்தினர் தங்களுக்குத் தெரிந்த அரைகுறைத் தமிழில் வணக்கம் சொல்லார்கள். இவர்களும் சொண்டுக்குள் சிரித்துக் கொண்டே சென்று விடுவார்கள். இந்த வணக்கமும், பதிலுக்கு இவர்களது சிரிப்பும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

ஒரு விடுமுறை நாளில் தன்னுடன் கூடப்படிக்கும் சினேகிதி வீட்டிற்குச் சென்று வருகின்றேன் என்று கூறிச்சென்ற வனஜா, திரும்பி வரவே இல்லை! பொழுது சாய ஊருக்குள் அரசல் புரசலாக கதை பரவ ஆரம்பித்துவிட்டது "வனஜா ஆமிக்காரனுடன் ஓடிப்போய் விட்டாள்" என்று. "வனஜாக்கா ஆமி ஐறிப்பிலை ஏறிப் போனதைப் பாத்தனான்" எனப் பக்கத்து அயல்ச் சிறுவன் ஒருவன் சொன்னதன் பின் பக்கத்து ராணுவ முகாமில் உள்ள சிலரிடம் விசாரித்ததில், அங்கு பணியாற்றிய தயானந்தா என்ற ராணுவ வீரனையும் காணவில்லை யென்பது தெரிய வந்தது. அன்று மணியத்தார் வீடு ஊராரின் நகைப்புக்களால் இழவு வீடாக மாறியிருந்தது.

இந்தச் சம்பவம் நடைபெற்று இப்பொழுது சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. மணியத்தார் வீட்டில் வனஜாவிற்கு செத்த வீடே கொண்டாட விட்டார்கள். அனேகமாக அந்த அயலே வனஜாவை மறந்து விட்டார்கள். இந்த நேரத்தில்;தான் வனஜா ஊருக்குள் யாருக்கும் தெரியாமல் அந்த இரவு நேரத்தில் வீட்டுக்கு வந்திருந்தாள்.

: "இந்த வீடு வேண்டாமெண்டுதானே அந்தச் சிங்களவன்கூட ஓடிப்போன நீ? இப்ப எதுக்கு திரும்பி வந்திருக்கிறாய்? அதுவும் இந்த இருட்டு வேளையிலை! நல்ல குடும்பத்திலை பிறந்தப் பொம்பிளை எவளாவது இருட்டிலை வெளிக்கிடுவாளா? தேவடியாளுவளவைதான் இராவிலை வெளிக்கிடுவாளவை! ஐயோ... என்ரை வயித்திலை ஒரு தேவடியாள் வந்து பிறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவல்லரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

nfo@nsjewellery.com

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

உயர்தர புடவைகள்
மற்றும் துணி வகைகள்
வாங்க சிறந்த இடம்

# Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைச்சிட்டாளே!" நாகம்மாள் தன் வயித்தைத் தன் கையால் குத்தியபடியே புலம்பிக் கொண்டிருந்தாள்.

அம்மாவினுடைய பேச்சில் இருந்து கிரிஜாவிற்கு எல்லாம் புரிய ஆரம்பித்தது. "அக்காதான்! நிச்சயமாக அக்காதான்" அவளை அறியாமலேயே அவளின் வாய் முணுமுணுத்தது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. வேகமாக வந்தவள், இருட்டாக இருந்ததால் லைட்டைப் போட்டாள்!. அங்கே ஒரு பெண் நிலத்தில் சப்பாணி கட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. முகம் தெரியவில்லை! அவளின் மடியில் ஒரு குழந்தைக் கிடப்பதும் தெரிந்தது. அம்மா பத்திரகாளிபோல நின்று கொண்டிருந்தாள்.

"ஏனடி இப்ப லைட்டைப் போட்டனி? எங்கடை வீட்டு நாத்தம் எல்லாருக்கும் தெரியட்டும் எண்டோ?" அம்மாவின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் தரையில் உட்காந்திருந்த அக்காவையும், அவளின் மடியில் கிடந்தக் குழந்தையின் கோலத்தையும் பார்த்த கிரிஜாவிற்கு கண்கள் கலங்கிவிட்டது! "அக்கா" என அவளின் வாய் அனுங்கியது, அவளுக்கே கேட்கவில்லை! ஆனால், கிரிஜாவின் கண்களின் ஓரத்தில் இருந்து கண்ணீர் மட்டும் வடிந்தது!.

"ஓ! ரத்த பாசத்திலை அழுவுறீங்களோ?" என்று அம்மா தன்னை முறைத்துப் பார்த்ததைப் பொருப்படுத்தாது அக்காவின் மடியில் கிடந்தக் குழந்தையைத் தூக்குவதற்காகக் குனிந்தபோது அவளின் தலையில் பிடித்து இழுத்து, "போடி உள்ளை" எனக் கத்தியபடிக் கிரிஜாவை வீட்டுக் கதவுப்பக்கம் தள்ளிவிட்டாள் நாகம்மா. கோபத்தில் தாயின் கண்கள் துடித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. கிரிஜா வீட்டுக்குள் செல்லாது, அங்கேயே நின்று கொண்டிருந்தது தாயின் கோபத்தை அதிகரித்திருக்க வேண்டும்!

"தேவடியாள் பெத்ததைத் தொடக் கூடாதடி" என அடித் தொண்டையால் கத்தினாள்! என்னதான் இருந்தாலும், வீட்டுக்கு வந்தவளை மாட்டுக் கொட்டகையில் வைத்துப் பேசிக் கொண்டிருக்கின்றாளே! எனத் தாயின்மீது எரிச்சலாக இருந்தது வனஜாவிற்கு. மாட்டுச் சாணகத்தை மொய்த்துக் கொண்டிருந்த கொசுக்கள் அக்காவின் மடியில்; கிடந்தக் குழந்தையையும் மொய்த்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்க கிரிஜாவிற்கு தாய்மீது கடுமையான கோபமாக இருந்தாலும், நல்ல காலம் அன்று அப்பா தொழில் நிமித்தமாகக் கொழும்புக்குச் சென்றிருப்பது, அவளின் மனதிற்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"காணாமல் போன மாடு, இப்பக் குட்டியோடை வந்திருக்கு." என்று சொன்ன அம்மாவின் வார்த்தைகளில் அவ்வளவு இளக்காரம் நிறைந்திருந்தது! சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு மீண்டும் திட்ட ஆரம்பித்தாள், "பொட்டைப் பிள்ளையைப் பெத்து வைச்சிருக்கிறாய், நாளைக்கு அதுவும் உன்னை மாதிரி ஓடுகாலியாத்தான் வரும்!" என்று சொல்லும் போதே அம்மாவின் முகத்தில் வன்மம் தெரிந்தது.

கொசு கடிப்பது, மழைத்தூறல் பட்டு முதுகுப்பக்கம் நனைவது, அம்மா திட்டுவது எதுவும் அக்காவின் கவனத்தில் இருப்பது மாதிரித் தெரியவில்லை! அம்மாவும் திட்டுவதை நிறுத்தவில்லை! "பிள்ளைக்குப் பேர் என்ன? சிங்களப் பேர் தானே? ஒரு சிங்களத்தியை என்ரைப் பேத்தியெண்டு தூக்கிக் கொஞ்சுவன் எண்டு நினைத்திராக்கும்" கேள்வியையும் கேட்டுப் பதிலை நக்கலாகவே அம்மாவே சொல்லி முடித்தாள்!.

"நீ ஓடிப் போனதாலை நாங்கள் பட்ட அவமானம் கொஞ்சநஞ்சமில்லை! அதெல்லாம் இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா ஊரே மறந்து போகேக்கை, இப்ப திரும்பி வந்து நிக்கிறாளே! இதை அறிஞ்சா ஊரே எங்களை உயிரோடை கொழுத்திப் போடுவாங்களே! ஐயோ..! ஏனடி திரும்பி வந்தாய்?" அக்கா மீது இருந்த கோபத்தைவிடக் கூடுதலாக ஊர்மீது பயமும் இருந்தது அம்மாவுக்கு.

"ஓடிப்போனவள் அப்பிடியோ போக வேண்டியதுதானே? எதுக்கு திரும்பி வந்தநீ? உன்னை ஆரும் இங்கை வெத்திலை வைச்சுக் கூப்பிட்டவையே?" அம்மாவின் வாயிலிருந்து கோபத்தில் வந்த வார்த்தைகள் எல்லாம் ஜென்ம விரோதியிடம் கேட்பது மாதிரியே இருந்தது! ஆனால் எதற்கும் அக்காவிடம் இருந்து சின்னச் சலனம் கூட இல்லை!.

சாதரணமாக அம்மா கோபப் பட்டால்கூடச் சத்தமாக பேசமாட்டாள். சுட்டுப்போட்டாலும் அம்மாவின் வாயிலிருந்து கெட்ட வார்த்தையே வராது. பக்கத்து வீடுகளில் யாராவது சண்டைப் பிடித்தாலும் "நீங்க பேசாமல் இருங்க, கோபம் குறைஞ்சதும் எல்லாம் சரியாயிடும்" என்று புத்திமதி சொல்கின்ற அம்மாதான் இன்று பெற்ற மகளைப் பார்த்து "தேவடியாள்" என்று சொல்கின்றாள்! "செத்துப்போ" என்று சொல்கின்றாள்!! மகளை மட்டுமல்ல பேரப் பிள்ளையையும் "ஓடுகாலியாத்தான் போகும்" எனச் சாபம் விடுகின்றாள்! தனது கோபக்கார அப்பாவைவிட, சாதிவெறி, மொழிவெறி பிடித்த ஊர்க்காரர்களை விட அம்மா மோசமாக இருந்தாள்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சினேகிதி வீட்டை போட்டு வாறன் எண்டு சொல்லிப் போட்டுச் சிங்களவனோடை ஓடிப்போனவள்தானே நீ! சிங்களவன் எல்லாம் உனக்குச் சினேகிதமாய் இருப்பாங்கள் எண்டு எனக்கு அண்டைக்குத் தெரியாமல்; போச்சே!" நினைத்து நினைத்துப் புலம்பிக்கொண்டிருந்தாள் அம்மா.

இன்று அம்மா இவ்வளவு கோபப்படுவதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. ஊரில் உள்ள மற்றப் பெற்றோர்களைப் போல எங்கள் இருவர் மீதும் எங்கள் அம்மா எந்தக் காலத்திலும் சந்தேகப்பட்டதே கிடையாது! அக்கா ஓடிப்போய் விட்டாள் எனத் தெரிந்த பிற்பாடும் "என் பிள்ளை அப்படிச் செய்திருக்கமாட்டாள்" எனக்கூறியபடி, என்னையும் அழைத்துக் கொண்டு இரவிரவாக அக்காவின் சினேகிதிமார் வீடுகளெல்லாம் விசாரிக்கும்போது, அம்மாவிடம் இருந்த அந்த நம்பிக்கைக்கு அக்கா செய்தது மிகப்பெரிய துரோகம்தான்.

"உனக்கு எதுவும் தெரியுமாடி? என்று என்னிடம் பலமுறை கேட்டாள். "தெரியாது" என்று நான் சொன்னதைக் கடைசிவரை அம்மா நம்பவே இல்லை! "உனக்குத் தெரியமல் அவள் பச்சைத் தண்ணிகூடக் குடிக்கமாட்டாளே? உண்மையைச் சொல்லடி. உண்மையிலை சிங்களவனோடைதான் ஓடிப்போனாளா?" என்று உண்மையையும் நம்பாமல், என்னை நச்சரித்துக் கொண்டே இருந்தாள்.

அன்று அப்பா, அம்மாவைத் திட்டியத் திட்டு கொஞ்ச நஞ்சமல்ல! சாதரணமாகவே அம்மாவிற்கும், அப்பாவிற்கும் ஏதாவது சண்டை ஏற்பட்டாலும் எங்களுக்கு முன் எந்தக் காலத்திலும் இருவரும் சண்டையிட்டதே இல்லை. அக்கா ஓடிப்போன நாளில் இருந்து அந்த நிலமை மாறிவிட்டது. அதன்பின் தினமும் வீட்டில் சண்டைதான்!

அக்கா ஓடிப்போன அன்று "என்னடி புள்ளை பெத்து வளத்தாய்?" என்று கேட்டு தும்புக்கட்டை முறியும்வரை அம்மாவை அடித்தும் அவரின் கோபம் தீரவில்லை! முதன்முறையாக அப்பா அம்மாவை அடிப்பதைப் பார்த்துப் பயந்த எனக்குக் காச்சலே வந்துவிட்டது!. "என்னோட மானம் போச்சு, மரியாதை போச்சு" என்று சொல்லி அன்று முழுவதும் அம்மாவைத் திட்டிக் கொண்டே இருந்தார். அன்று அப்பாவிடம் வாங்கியத் திட்டுக்களைத்தான் இன்று அம்மா திரும்பக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"புள்ளை பிறந்ததும் உன்னை அவனுக்குப் புளிச்சுப் போயிருக்கும், துரத்தி விட்டிருப்பான்!" என்று அம்மா பல்லை நெருமியபடியே சொன்னாள். "இப்படியெல்லாம் பேச அம்மா எங்கே கத்துக்கிட்டா" என எனக்கு ஆச்சரியமாக இருந்தது. திருடிவிட்டு மாட்டிக்கொண்ட கள்ளவனைப் போல உட்கார்ந்திருக்கும் அக்காவின் முகத்தைப் பார்ப்பதற்கு முயன்றேன். தலையைக் கவிழ்ந்தபடியே உட்கார்ந்து கொண்டிருந்ததால் முழுமையாகப் பார்க்க முடியவில்லை. ஆனால், பழைய அக்காவாக இவள் இல்லையென்பது மட்டும் தெரிந்தது.

நல்ல மல்கோவா மாம்பழம்போல் மொழு மொழுவென இருக்கும் அக்காவின் முகம்! சிம்ரன் மாதிரி ஒல்லியான, அழகான உடம்பு. எடுப்பான மார்பகங்கள். அவள் அழகிற்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு நான் அவ்வளவு அழகில்லைத்தான். ஆனாலும், கண்ணியமான பிள்ளைகள் என்ற பெயர் ஊரில் எங்கள் இருவருக்கும் இருந்தது. அதிலும் அக்காவிற்கு அந்த மரியாதை கூடுதலாகவே இருந்தது.

அயலில் உள்ளவர்கள் தங்கள் பெண் பிள்ளைகளைத் திட்டும்போது "நல்லம்மா பொண்ணு வனஜாவைப் பார்! நீயம் இருக்கிறியே!" எனச் சொல்லித்தான் திட்டுவார்கள்!. அப்படிப்பட்ட அக்காதான் ஆமிக்காரனோடு ஓடிப்போனாள்.

அக்கா ஓடிப்போகும்போது இருந்ததில் பாதி உடம்புகூட இப்போது இல்லை! முகமெல்லாம் ஒட்டியிருந்தது! மார்பகங்கள் இருப்பதற்கான அடையாளமே தெரியவில்லை! கன்னத்தில் கிள்ளியெடுப்பதற்குக்கூடச் சதையற்றுப் போயிருந்தாள். அக்காவைப் பார்க்கவே பாவமாயிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"கல்யாண ஆசை வந்தா எங்களிட்டை சொல்ல வேண்டியதுதானே? சிங்களவனோடை ஓடுறதைவிட அப்படிக் கேக்கிறதிலை ஒரு வெக்கமும் இல்லை! நீயெல்லாம் உசிரோடை இருக்கிறதைவிட, ஒரு முளக் கயித்திலை தொங்கியிருக்கலாம்!".

அக்கா பேசவில்லை! அம்மாவை நிமிர்ந்து பார்க்கக்கூட இல்லை! உடம்பில் மழைத்தூறல் விழுவதைக்கூடப் பொருட் படுத்தவில்லை! என்னையாவது பார்ப்பாள் என ஒரு எதிர்பார்ப்போடு நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் எனது பக்கமும் பார்வையைத் திருப்பவில்லை! இவ்வளவு ஏன் தன்னைக் கொசு கடிப்பதைக் கூட அவள் பொருட் படுத்தவில்லை! மடியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் மீதே அவளின் பார்வை இருந்தது. அழுது கொண்டிருந்தாள். ஆனால் ஒரு முனகல் சத்தம்கூட வரவில்லை! இடையிடையே மூக்கை உறிஞ்சும் சத்தம் மட்டும் மெதுவாகக் கேட்டது!

அக்கா எதற்காக இப்பொழுது வந்திருக்கின்றாள்? கணவனுடன் சேர்ந்திருக்கின்றாளா? பிரிந்திருக்கின்றாளா? பிடிக்கவில்லை என்று துரத்திவிட்டானா? அல்லது பிடிக்கவில்லை என்று இவளே திரும்பி வந்துவிட்டாளா? இவை பற்றியெல்லாம் அம்மா கேட்கவே இல்லை! அம்மா கேட்டதெல்லாம் ஏன் வந்தாய்? எதற்கு வந்தாய்? என்று மட்டும்தான். அம்மா எவ்வளவுதான் கோபமாகவும், அகங்காரமாகவும் கேள்விகளைக் கேட்டாலும், வீட்டுக்கு வெளியே சத்தம் கேட்காத மாதிரியாக அடித் தொண்டையால்தான் கேட்டாள்.

எனக்கோ அக்காவுடன் பேசுவதற்கு ஆசையாக இருந்தது. அக்கா பேசுவதைக் கேட்க வேண்டும்! அவள் சிரிப்பதைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருந்தது. அம்மா அனுமதிக்கமாட்டாள் என்பதால் அமைதியாகவே நின்றேன். அம்மாவின் புலம்பல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

"நீ பிறந்த பின்னாலை உன்னை விட்டிட்டு ஒரு வாய் சோறு சாப்பிட்டிருப்பேனா? உன்னை தூங்க வைக்காமால் நான் தூங்கியிருப்பேனா? என்னை விட்டிட்டுப் போறதுக்கு எப்பிடியடி உனக்கு மனசு வந்திச்சு? அதை நினைச்சாத்தான் என்னாலை தாங்கேலாமல்; கிடக்கு" என்று சொல்லி கண்களில் வடிந்த கண்ணீரை முந்தானைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

அம்மா கேட்ட கேள்விகளுக்கு "தப்புத்தான் ஏதோ தெரியாமல் செய்திட்டன்" என்று அக்கா ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை! "என்னை மன்னித்துக்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள் அம்மா" என்று கெஞ்சக்கூட இல்லை! கால்களைப் பிடித்துக் கொண்டு அழவும் இல்லை! தலையை நிமிர்த்தி, அம்மாவை ஒரு முறைகூடப் பார்க்கவில்லை! பேசு, பேசு என்று அக்காவின் காதுக்கு மட்டும் கேட்கும்படியாக நான் குசுகுசுத்தேன். அதற்கும் அக்கா வாய் திறக்கவே இல்லை!

அம்மாவிற்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை, பின்பக்கமாக வந்து பக்கத்து வீட்டை எட்டிப் பார்த்தாள். பிறகு திரும்பி வந்து "நல்ல காலம் நீ வந்த நேரம் இடியும், மழையுமா இருக்கு. விசயம் வெளியாலை. தெரிஞ்சா ஊரே வந்து உனக்குப் பாடை கட்டிடும்! அப்பிடி நடக்குறதுக்குள்ளை நீயா வந்த வழியைப் பாத்து போயிடு! அதுதான் உனக்கு நல்லது." அம்மா அறிவுரை சொல்வது போல மிரட்டலாகவே சொன்னாள்.

அறிவுரையோ, மிரட்டலோ எனக்கும் அதுதான் நல்லதாகப் பட்டது. ஊருக்குத் தெரிவதற்கு முன் பக்கத்துவீட்டு பரமசிவத்துக்குத் தெரிந்தாலே போதும்! ஏனென்றால் அக்கா ஆமிக்காரனுடன் ஓடிப்போன நாள் முதலே தாம் தான் தமிழைக் காக்க வந்த காவலன் போலவும், எங்கள் குடும்பத்தையேச் சிங்களக் குடும்பம் போலவும் ஊர் முழுக்க விசத்தைக் கக்கிக்கொண்டிருப்பவர் அவர்தான்!

கேள்வி கேட்டுக்கொண்டிருந்த அம்மாவையும், உயிரே போனாலும் வாயைத் திறக்கக்கூடாது என்ற பிடிவாத்துடன் உட்கார்ந்திருக்கும் அக்காவையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது அம்மாவின் பார்வை எனது பக்கம் திரும்பியது. "ஏண்டி உன் படிப்பு ஏன் நிண்டதெண்டு இவளுக்குத் தெரியுமா? உனக்குப் பேசுற கலியாணம் எல்லாம் இந்த ஓடுகாலியாலை குழம்பிப் போறதாவது இவளுக்குத் தெரியுமா?" என்னைப் பேசுகிற சாட்டிலும் அக்காவைத்தான் திட்டிக் கொண்டிருந்தாள் அம்மா.

அக்கா ஓடிப்போனதில் இருந்து நான் பாடசாலைக்குப் போவதை மட்டும் நிறுத்தவில்லை. கோவில் திருவிழாக்களுக்குப் போக விடுவதில்லை! ஏன் அருகில் உள்ள கடைகளுக்குக்கூட அனுப்புவதில்லை! பிள்ளைகள் மீது அவர்களுக்கிருந்த




நம்பிக்கையே போய்விட்டது. என்கொரு கல்யாணத்தை செய்து ஒருத்தன் கையிலை பிடிச்சுக் கொடுத்திடவேணும் எண்டு, எத்தனையோ கல்யாணங்கள் பேசியிருப்பார்கள். அக்காவின் கதையைக் கேட்டதும் எவரும் வீட்டுப் பக்கம்கூட வரமாட்டார்கள்! இப்படி பல அவமானங்களைச் சந்திருக்கின்றார்கள் என் பெற்றோர்கள். அந்தக் கோவம் அம்மாவிடம் அப்படியே இருந்தது. ஆனால், எனக்கு என் பழைய அக்காதான் என் கண்ணுக்குள் நின்றாள்.

ஓடிப்போய் விட்டாள் என்பதற்காக அக்கா என்ற உறவு இல்லாமல் போய்விடுமா? கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "நீ எழுந்து வீட்டுக்குள்ளை வா அக்கா" என்று நான் சொன்னதை அக்கா மட்டுமில்லை, அம்மாவும் காதில் வாங்கியது மாதிரித் தெரியவில்லை! அம்மா தனது நிலைப்பாட்டில் உறுதியாகவே நின்றாள்.

"எந்த வழியா வந்தியோ, அந்த வழியாவே போயிடு! இன்னும் சற்று நேரம் போனா சன நடமாட்டம் ஆரம்பிச்சிடும். இப்பவே போறதுதான் உனக்கு நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையெண்டா நானே அக்கம் பக்கத்தைக் கூப்பிட்டு உன்னை பரிசு கெடுத்திடுவன்!" அம்மாவிற்கு இவ்வளவு கல் நெஞ்சம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதேநேரம்; ஆறுதல் தேடி வந்த அக்காவைத் திருப்பி அனுப்புவதிலும் எனக்கு உடன்பாடாக இல்லை!

"அக்கா நீ உள்ளே வா அக்கா" என்றேன். "வாயை மூடடி" என்ற அம்மாவின் குரலால் வீடே அதிர்ந்தது. "சொந்தம் கொண்டாடுறீங்களோ? இல்லை நீங்களும் அக்கா மாதிரி ஆராவது சிங்களவனை இழுத்துக் கொண்டு ஓடுறதுக்குத் துணை சேர்கிறீங்களாக்கும்" அம்மாவின் பேச்சில் நக்கல், நையாண்டி, விரக்தி, கோபம் எல்லாம் கலந்திருந்தது. "அம்மா" என நான் மெதுவாக அனுங்கினேன். "வாயை மூடடி திருட்டு முண்டம்! நான் செத்தப் பிறகு உறவு கொண்டாடு" என்று சொன்னவள் என் பிடரி மயிரைப் பிடித்து வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு போனாள். முடிந்த மட்டும் அம்மாவுடன் மல்லுக் கட்டினேன். என்னுடைய திமிறலை அம்மா பொருட்படுத்தவே இல்லை.

அக்கா ஓடிப் போனதற்கப்புறம் அம்மா பெயருக்குத்தான் சாப்பிடுவாள். பழைய உடம்பு அம்மாவிடம் இல்லை. மெலிந்து எலும்பும், தோலுமாகத்தான் இருந்தாள். ஆனாலும் எப்படி இவ்வளவு பலம் வந்தது? என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. என்னை வீட்டுக்குள் விட்டு பின்கதவைப் பூட்டி சாவியையும் எடுத்துக் கொண்டவள் நேராகக் குளியலைறைக்குப் போய் அந்த அதிகாலை மழைக் குளிரிலும் தலையில் தண்ணியை ஊத்திக் கொண்டாள். அம்மாவிற்கு உடம்பு விறைத்த மாதிரித் தெரியிவில்லை! ஆனால், அம்மாவின் செயல்களால் எனக்கு உள்ளம் விறைத்து விட்டது!

பின் வாசல் கதவுப் பக்கம் வந்து கதவைத் திறக்க முடியுமா? என முயற்சித்துப் பார்த்தேன். முடியவில்லை. வெளியில் மழை பெய்யும் சத்தத்தைத் தவிர வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. ஈரத் தலையுடன் வெளியில் வந்த அம்மா சாவியைத் தூக்கி எறிந்தாள். அது என் காலடியில் வந்து




விழுந்தது. அப்படியே சாமி அறைக்குள் சென்றவள் விம்மி, விம்மி அழ ஆரம்பித்தாள்.

நான் அவசரம் அவசரமாகச் சாவியை எடுத்து பின் வாசல் கதவைத் திறந்து பார்த்தேன். முன்பு இருந்த இடத்தில் அக்காவைக் காணவில்லை! மழை முன்பை விடக் கூடுதலாக தூறிக் கொண்டிருந்தது. பின் பக்கப் பொட்டு வேலிக்குள்ளால் நுழைந்து அக்கா பிள்ளையைத் தோளில் சுமந்தபடி மழையில் நனைந்து கொண்டே போவது தெரிந்தது.


எனக்குத் தெரியும் அம்மா இவ்வளவு கல்நெஞ்சுக்காரி இல்லை! அவள் அப்பாவிற்குப் பயந்தாள்! ஊருக்குப் பயந்தாள்! எனது எதிர்காலத்திற்காகப் பயந்தாள்! எனக்கு முதன் முதலாக அப்பா மீதும், றாஜீன் மீதும் கோபம் கோபமாக வந்தது!. இவர்களுக்குப் பயந்த அம்மாமீது பரிதாபம்தான் வந்தது. அக்கா இரண்டாவது முறையாக வீட்டைவிட்டு போய்க் கொண்டிருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் மாநகரில்...

# ஆனந்த் ஆசிய ஆப்பிரிக்க

## பல்பொருள் அங்காடி



ஹம் நகரத்தில் இதுவரை காலமாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஆனந்த் ஸ்டோர்ஸ் ஆகிய நாம் 22.10.2020 (வியாழக்கிழமை) முதல் ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்க இருக்கின்றோம். ஐந்தாம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு இதுவரை காலமும் ஆதரவும் கொடுத்துவரும் அன்பான வாடிக்கையாளர்கள். நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்





அத்துடன் எமது ஸ்தாபனம்
**ஆனந்த் ஆசிய ஆப்பிரிக்க பல்பொருள் அங்காடி**
என்ற புதியதோர் பெயருடன் இயங்கவுள்ளதென
மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

**5 ஆம் ஆண்டு**
விழாவை முன்னிட்டு
**சிறப்பு தள்ளுபடி விற்பனை**

**Telefon : 02381 4977491**
**Telefax : 02381 4977492**

அனைத்து விதமான மளிகை பொருட்கள்,
கடலுணவுப் பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள், மிகக் குறைந்த
விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்

**Öffnungszeiten :**
**Mo.-Sa. : 09:00Uhr - 21:00 Uhr**
**Heinrich - Reinköster-Strasse 10**
**59065 Hamm, Germany**
கம் பிரதான புகையிரத நிலையத்திற்கு
அருகாமையில் (நடைதூரம்)

துரித பணமாற்றுச் சேவை
VALUTRANS MONEY TRANSFER


வாகனம் தரிப்பிடம் வசதிகள் உண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. சபேசன்

# வாழ்க்கை வரலாற்றுப்படமும் அதன் சர்ச்சைகளும்...




**"ஒரு மனிதருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக உருவாக்குவதில் இந்தியச் சினிமா நேர்மையான முறையில் செயற்பட்டதில்லை. குறிப்பிட்டவரை புனித பிம்பமாகவும், அப்பழுக்கற்றவராகவும் காட்டுவதிலேயே கவனமாக இருப்பார்கள்."**





கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக எடுக்கிறார்கள் என்கின்ற செய்தி சர்ச்சையை உருவாக்கி உள்ளது. அந்தப் படத்தில் விஜய் சேதுபதி கதநாயகனாக நடிக்கின்றார் என்கின்ற அறிவிப்பே உண்மையில் சர்ச்சை அதிகமானதற்குக் காரணம். விஜய் சேதுபதி மக்கள் நலனில் அக்கறை உள்ளவராக கருதப்படுபவர். "நீட்" போன்ற அநீதியான சட்டங்களை எதிர்த்துக் குரல் கொடுப்பவர் அவர். அப்படியானவர் முத்தையா முரளிதரன் வேடத்தில் நடிக்கிறார் என்கின்ற செய்தி பல மட்டங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

முத்தையா முரளிதரன் இலங்கையின் மலையகத்தில் பிறந்தவர். மிகச் சிறந்த பந்து வீச்சாளரான முரளிதரன், டெஸ்ட் போட்டிகளில் இதுவரை 800 விக்கட்டுகளை வீழ்த்தி சாதனை புரிந்துள்ளார். முரளிதரன் பற்றிய திரைப்படத்திற்கும் "800" என்றுதான் தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சாதனைக்கானப் பயணம், முரளிதரனுக்கு அப்படி ஒன்றும் இலகுவாக அமைந்து விடவில்லை. இனவாதம், நிறவாதம் போன்ற பெரும் நெருக்கடிகளை அவர் சந்திக்க வேண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...



திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

K.KOWTHAMAN
079 317 82 36

S.MANIVANNAN
079 128 55 61

K. VIJAYASURESH
079 275 68 62

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ஒரு திரைப்படமாக உருவாக்கக் கூடிய அளவில் அவருடைய வாழ்க்கை சுவாரஸ்யங்களும், சவால்களும் நிறைந்தவை என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

முரளிதரன் பாடசாலையில் படித்த காலங்களிலும், பாடசாலை அணிக்காக கிரிக்கெட் விளையாடிய காலங்களில் இனவாத சிக்கல்களை எதிர்கொண்டார். சிங்களப் பேரினவாதிகள் கலவரம் என்கின்ற பெயரில் தமிழர்களின் சொத்துக்களைச் சூறையாடிய போது, முரளிதரனின் தந்தையார் மற்றும் உறவினர்களின் சொத்துக்களின் ஒரு பகுதியும் அழிவுற்றதாக ஒரு செய்தி இருக்கிறது. ஆனால், இனவாதத்திற்கு எதிராக முரளிதரன் ஒரு போதும் பேசியது இல்லை. இனவாதம் என்கின்ற சவாலை முரளிதரன் போராட்டத்தின் ஊடாக எதிர்கொள்ளவில்லை. மாறாக அவர் இனவாதத்திடம் முற்றாக சரணடைந்தார். இலங்கையில் ஒரு தமிழர் எப்படி வாழ வேண்டும் என்று சிங்களப் பேரினவாதம் விரும்புகிறதோ? அதே போன்று தன்னை ஆக்கிக் கொண்டார்.

அவுஸ்ரேலியாவில் முரளிதரன் நிறவாத சிக்கல்களை எதிர்கொண்டார். அவருடைய பந்து வீச்சு முறையும் திட்டமிட்ட வகையில் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டது. மருத்துவப் பரிசோதனைகள் எல்லாம் முரளிதரனுக்கு நடந்தன. அவருடைய பந்து வீச்சில் குறை இல்லை என்று அறிவிக்கப்பட்ட பின்னரும், அவுஸ்ரிலியாவின் குறிப்பிட்ட சில நடுவர்கள் முரளிதரனுடைய பந்து வீச்சை முறையற்றது எனத் தாக்கினார்கள். பலருடைய ஆதரவுடன் முரளிதரன் இந்த நெருக்கடிகளில் இருந்து மீண்டார்.

அநேகமாக "800" திரைப்படமும் அவுஸ்ரேலிய நடுவர்களை வில்லன்களாகவும், அவர்களை வெற்றி கொண்ட ஹீரோவாக முரளிதரனையும் சித்தரிக்கின்ற ஒரு திரைப்படமாகவே உருவாக வாய்ப்பு இருக்கிறது. ஒரு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக உருவாக்குவதில் இந்தியச் சினிமா நேர்மையான முறையில் செயற்பட்டதில்லை. குறிப்பிட்டவரை புனித பிம்பமாகவும், அப்பழுக்கற்றவராகவும் காட்டுவதிலேயே கவனமாக இருப்பார்கள். எதிர்மறையான அல்லது பொதுவான மக்கள் ஏற்றுக் கொள்ளாத மக்களை மேலோட்டமாகக் கூடப் பேசுவது இல்லை.

"சிண்டலர்ஸ் லிஸ்ற்" என்று ஒரு ஹாலிவுட் திரைப்படம் இருக்கிறது. யேர்மனியில் பல நூற்றுக் கணக்கான யுதர்களை நாசிக்களிடம் இருந்து காப்பாற்றியவர் சிண்டலர். துணிச்சலும், மனித நேயமும் உள்ள ஒருவரின் கதை அது. ஆனால், திரைப்படம் சிண்டலருக்கு பெண்களுடன் இருந்த தொடர்புகளையும் தொட்டுச் சென்றது. இந்தியாவில் என்றால் இந்தப் பக்கத்தை மறைத்திருப்பார்கள்.

தந்தை பெரியார் பற்றி தமிழில் படம் எடுத்தார்கள். தந்தை பெரியார் போராட்டக் களத்திற்கு வந்த பின்னர் நடந்தவைகளைப் படமாக எடுத்திருக்கலாம். ஆனால், வழமை போன்று அவருடைய சிறுவயதில் இருந்து ஆரம்பித்தார்கள். இளைஞனாக இருந்த பொழுது தான் தாசி வீடுகளுக்குச் சென்றதாகப் பெரியாரே சொல்லி இருக்கிறார். அந்தக் காட்சியை ஏதோ வரவு, செலவு கணக்குப் பார்க்கப் போனதாக மாற்றினார்கள். மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்கின்ற கவலை இன்றி, இந்த மக்கள் மதம், சாதி போன்ற அடிமைத் தளங்களில் இருந்து விடுபட வேண்டும் என்று பாடுபட்டவர் தந்தை பெரியார். ஆனால், பார்ப்பவர்கள் என்ன சொல்வார்களோ? என்று யோசித்து, யோசித்தே படத்தை எடுத்து முடித்தார்கள். பெரியார் என்கின்ற பெரு நெருப்பை திரைப்படத்தில் பார்த்த போது, சாம்பிராணி புகை அளவு கூட இல்லாது இருந்தது.

அண்மையில் நடிகை சாவித்திரி பற்றி படம் எடுத்திருந்தார்கள். அதில் ஜெமினிகணேசன் பாத்திரம் ஏறக்குறைய வில்லன் பாத்திரமாக மாறி இருந்தது. கடைசியில் ஜெமினி கணேசனின் மகளும், சாவித்திரியின் மகளும் யு+ருப் தளங்களில் சண்டை இட்டது, சாவித்திரி திரைப்படத்தை விட சுவாரஸ்யமாக இருந்தது. தனிநபர்களின் வாழ்க்கை வரலாறுகளை இந்தியாவில் இப்படித்தான் திரைப்படமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பலமும், பலவீனங்களும் கொண்டவர்கள்தான் மனிதர்கள் என்பதை உணர்ந்து, இத்தயை திரைப்படங்களை யாரும் இதுவரை உருவாக்கியது இல்லை. வீரபாண்டிய கட்டபொம்மனில் இருந்து, சாவித்திரி வரை உண்மையான வரலாற்றைப் பேசிய படங்கள் வந்தது இல்லை.

இப்படித்தான் இந்த "800" படமும் வரப் போகிறது. பல சவால்களை வெற்றி கொண்ட ஒரு ஹீரோவாக முரளிதரன் காட்டப்படுவார். சிலவேளைகளில் "தமிழா, தமிழா" மாதிரியான பாடல்களும் இடம்பெறலாம். அப்படி ஏதும் இல்லாமல், முரளிதரன் "தமிழர்" என்கின்ற அடையாளத்தை துறந்து "இலங்கையர்" என்கின்ற அடையாளத்துடன் வாழ்ந்தவர் என்கின்ற உண்மையும், பேரினவாதத்தின் முன் சரணாகதி அடைந்தவர் என்கின்ற உண்மையையும், தன்னுடைய முட்டாள் தனமான உளறல்களால் பல தமிழர்களின் மனங்களைப் புண்படுத்தியவர் என்கின்ற உண்மையையும் படம் பேசுவதாக இருந்தால், "800" திரைப்படத்தைத் தாராளமாக வரவேற்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Radio - by - Phone



16 ஆம் ஆண்டில்...

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற அழையுங்கள்

00 49 231 700 977 60

00 4934 5483411998 தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org